கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௫ } பிரமாதீச ௵ ஆடி ௴ . { பகுதி ௪

## கும்பாபிஷேகம்.

சிவபுண்ணிய சீலர்களாக விளங்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரும் பிரபலமும் பெற்றுவருவதற்கேற்ப எத்தனையோ சிவாலய சீரணோத்தாரண கும்பாபிஷேகாதிகளைச் செய்து பதிபுண்ணியப்பெருஞ் செல்வர்களாக விளங்குவதை உலகம் நன்கறியும். சிவ புண்ணியத்தைக் குலவிருதாகக் கொண்டுள்ளவர்களாகிய இவருள் பள்ளத்தூர் நகரத்தார்கள் தம் மூரிலுள்ள ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் ஆலயத்திருப்பணி வேலை முடித்து நிகழும் பிரமாதீச ௵ ஆனி ௴ ௨௭ ௳ மஹா கும்பாபிஷேகம் நடத்தினார்கள்.

ஆலயத்திருப்பணி கண்கவர்வனப்பிற்றாகத் தேவதச்சனும் பிரமிக்கும்படி எழில் பெற்று விளங்குகின்றது. உலோகங்களாலும் மரத்தாலும் செய்யப்பெற்றாற் போலவே கருங் கற்களால் விசித்திரமான பற்பல சித்திர வேலைகள் செய்யப்பெற்றுள்ளன. நம் தமிழ் நாட்டில் இற்றைக்கும் இத்தகைய மதி நுணுக்கம் வாய்ந்த கைத்தொழிலாளிகள் இருக்கின்றார்களென்பதைத் தெரிந்து நாம் இறுமாப்புக் கோடற்கு இத்திருப்பணி ஓர் சிறந்த சான்றாகும். சிலா விக்கிரஹங்களும், உலோக விக்கிரஹங்களும் கண்ணொடு மனத்தையும் கவரத்தக்கவாறு சுந்தரமும் திருவருள் விளக்கமுங்கொண்டு அமைந்துள்ளன. பள்ளத்தூர் நகரத்தார்களின் உண்மை யன்பிற்கேற்றனவாக இறைவனருளால் எல்லாம் இனிதமைந்துள்ளன.

கும்பாபிஷேக தரிசனார்த்தம் வந்திருந்த ஜனங்கள் சுமார் ஐம்பதினாயிரத்துக்கு மேலிருக்கலாம். ஆகமபண்டித சிகாமணிகளான

ஆதி சைவர்களும், வேதபாரங்கதரான அந்தணர்களும் வந்திருந்து சாஸ்திர விதிப்படி கும்பாவிஷேகக் கிரியைகள் யாவற்றையும் மிக்க பக்தி சிரத்தையுடன் நடத்தினார்கள். ஸ்தூபிகட்கு அபிஷேகமானவுடன் உபயகருடன் வட்டமிட்டமையால் இனி இந்நகரத்தார்கட்கு மேலும் மேலும் சகல ஐஸ்வரியங்களும் வளர்ந்தோங்கு மென்று ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் பேசிக் கொண்டாடினார்கள்.

அந்நகரிலுள்ள குளங்களிலெல்லாம் நீர்பெருகியிருந்தமையால் ஜனங்கட்கு யாதொரு அசௌகர்யமுமில்லை. பிராமண போசனமும், மகேசுவர பூசையும், நகரத்தார் விருந்தும், மற்றும் ஒவ்வொருவகுப்பினருக்கும் போசனமும், ஏழைகட்கு அன்ன தானமும் நன்றாக நடந்தன. பல இடங்களில் தென்னங் கீற்றுக் கொட்டைகைகளும் காவணங்களும் போடப்பட்டிருந்தன. தண்ணீர்ப் பந்தல் மிகவும் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. இதன் அலங்காரத்துக்கே சுமார் ரூபா 1000 செலவாயிருக்கலாம். ஜனக்கூட்டத்தால் யாருக்கும் எவ்வித சங்கடங்களும் நேரா வண்ணம் திருப்புத்தூர் சப்மாஜிஸ்திரேட் அவர்கள் போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் முதலிய உத்தியோகஸ்தர்கள் வந்து பாது காத்தனர். தெருக்கள் சந்துக்கள் முடுக்குகள் குளக்கரைகள் எங்கும் எண்ணிறந்த சந்திரோதயமானாற் போன்ற மின்சார விளக்குகள் பிரகாசித்துப் பேரழகு செய்தன.

அன்று பகல் 2மணிக்கு தண்ணீர்ப் பந்தலில் ஒரு சபை கூடியது. மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் சபையார் விருப்பின்படி அக்கிராசனம் வகித்து முன்னுரை கூறியமர்ந்தபின் தூத்துக்குடி வாசியும் திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகருமாகிய ஸ்ரீமத் போ. முத்தையபிள்ளையவர்கள் பதி புண்ணியப் பெருமையைப் பற்றியொரு மகோபந்யாசஞ் செய்தார்கள். பின்னர் மதுரை வித்துவான் ப்ரும்மஸ்ரீ நா. சுந்தரேசுவர ஐயரவர்கள் பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் சரித்திரத்தை இனிது பிரசங்கித்தார்கள். இவ்விரு பிரசங்கங்களினும் சபையார் கொண்ட மகிழ்ச்சியை யளவிடலரிதாகும். பின்னர் மதுரை வித்தியாபாநுப்பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் மேற்குறித்த இருபிரசங்கங்களின் சிறப்பைக்கூறி வாழ்த்துக் கவியொன்று சொல்லிப் பொருள் விரித்துரைத்தார்கள். பின்னர்

வலபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகாசிரியர் நெடு வை வித்துவான் ஸ்ரீமத் திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் கும்பாபிஷேகச் சிறப்பைப்பற்றி யியற்றிய வாழ்த்துக் கவிகளை இன்னிசை நயம்பட இசைத்தார்கள். முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் பிரசங்கங்களின் சாரத்தை யெடுத்துரைத்தும் கவிகளைப் பாராட்டியும் பேசி முடிவுரை கூறினார்கள். மாலை 5மணிக்கு முடிந்தது.

இரவு 10 மணிக்கு மேல் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் பரிவாரங்களுடன் திருவீதி கொண்டருளிய காட்சி மிகவும் சிறப்புற்று நடந்தது. கோடி சூர்யப்பிரபைபோல் எண்ணிறந்த தீவர்த்திகள் விளங்கின. எள் விழற்கு மிடமிலா வண்ணம் ஜனங்கள் எல்லா வீதிகளிலும் நெருங்கி நின்றார்கள். வாணக்காட்சியை வருணிக்க இடம் பற்றாது. அநேக விதமான விசித்திர வாணங்கள் கிளம்பி ஜனங்களை மகிழ்வித்தன. வேதபாராயணம் தேவாரபாராயணம் ஆடல் பாடல்களுடன் எம்பிரான் திருவீதி கொண்டருளிய அற்புத காட்சியை என்னென்று கூறுவோம்? கும்பாபிஷேக சம்பந்தமான செலவுமட்டும் சுமார் 7000 ரூபா இருக்குமென்று சொல்கிறார்கள்.

இங்ஙனமாகப் பள்ளத்தூர் நகரத்தார்களின் உண்மை விசுவாசத்துக்கேற்ப எல்லாவித சிறப்பும் நிரம்ப நடைபெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாமொன்று கூறாதிருக்க முடியவில்லை.

நகரத்தார்கள் கும்பாபிஷேகம் திருவிழா முதலியவற்றைப் பெரும் பொருட் செலவில் மிக்க சிரத்தையுடன் ஆங்காங்கு நடத்துகின்றனர் இக்காலங்களில் சதிர்க்கச்சேரி வாணவேடிக்கை முதலியவற்றில் செலவிடுகிற பெரும் பொருளைச்சற்றுச் சுருக்கிச் செலவிடலாம். தண்ணீர்ப்பந்தல் என்பதை ஒரு கலியாணக் கொட்டகையை விட அதிகமாக அலங்கரிப்பதால் அதில் பெரும் பணம் செலவாகின்றது. ஒரு தண்ணீர்ப்பந்தல் அலங்காரத்துக்கு ஆயிர ரூபா செலவானால் அதில் தண்ணீர் நீர்மோர் பானகம் முதலிய வற்றில் 100 ரூபாகூட ஆவதில்லை. இத்தகைய வகைகளில் பெரும் பொருளைச் செலவிடுவதில் செலவுக்கேற்ற பெரும் பயனில்லையே. இங்ஙனம் பெருமிதம் காட்டச்செலவிடுவதைச் சற்றுக்குறைக்கலாமன்றோ? இத்தகைய தேவாராதனை விசேஷ காலங்களில் தமிழ் வித்துவான்களையும சமஸ்கிருத பண்டிதர்களையும் சபை கூட்டிச் சமயவுண்மைகளையும் ஒழுக்க நெறிகளையும நீதி முறைகளையும் பற்றி நாள்தோறும் உபந்யாசங்கள் நடைபெறச் செய்தால் எவ்வளவு பெரும் பயன் விளைவதாகும். இதைப்பற்றி யாம் சிலரிடம் பேசியபோது அவர்கள் இதற்கு முன் வழக்கமில்லையே யென்கின்றார்கள். இத்தகைய நற்காரியங்களைச் செய்தற்கு முன் வழக்கத்தை

யெதிர்பார்ப்பது அவசியமில்லையே. அன்றியும் பண்டைக் காலத்தில் திருவிழாக்காலங்களில் "பட்டி மண்டபம்" என்னும் பிரசங்க மண்டபங்களை அலங்கரித்தல் அறவோர் நன்மொழி கேட்டலாதியவை நிகழ்ந்ததாக மணிமேகலை யென்ற சங்கநூலில் கூறப்பட்டுள்ளதே. அறிவு விருத்திக் கேற்ற நல்லுபதேசப் பிரசங்கங்கள் அடுத்தடுத்து நிகழுமாயின் அவை நம் மக்கள் மனத்திற் சிறிது சிறிதாகப் பதிந்து மனத்தைப் பண்படுத்தி நல்லொழுக்கத்தை அபிவிருத்தி செய்யு மென்பதில் யாது தடை? பல்லாயிரக் கணக்காகச் செலவிட்டு வாணவேடிக்கை காட்டிப் பணத்தைப் புகைப்பதினும் உபந்யாசங்கள் விஷயமாகச் செலவிடல் எவ்வளவு சிறந்ததாகும்.

இவ்விஷயத்தை நம் சிவநேசச் செல்வர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு ஸ்தல உற்சவ காலங்களிலும் அவ்வத்தலபுராணக் கதைகளைத் துண்டுப் பத்திரங்களாக எழுதிப் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு எல்லா ஜனங்கட்கும் கொடுக்கச் செய்யவேண்டும். ஸ்தலமகத்துவம் ஜனங்கள் மனத்தில் பதிந்தால் பக்தி அதிகரிக்கும். பக்தியை வளர்த்தற்கு இஃதொரு சிறந்த கருவியேயாம். தென்னாட்டில் திருநெல்வேலி திருச்செந்தூர் சங்கர நாராயணசாமி கோயில் முதலியவற்றில்வருஷந்தோறும்நடைபெறும் திருவிழாக்காலங்களில் அவ்வத் தேவஸ்தான விசாரணை கர்த்தர்கள் இங்ஙனமே செய்வித்து வருகின்றார்கள். அக்காலங்களில ஜனங்கள் கூடும் பொது இடங்களில் சைவசமயப்பிரசங்கஞ் செய்ய மாதநிவேதனங்கொடுத்து சைவப் பிரசங்கியாரொருவரை நியமித்து மிருக்கின்றார்கள். இங்ஙனம் செய்தலால் பெரும் பயனுண்டென்பது யாவருமறிந்ததே. இவ்வாறு நியமித்தபின் அங்கங்கே பாதிரிகளின் கொடுமை நீங்கிவிட்டது.

### தனவைசிய கனவான்களே!

இனியேனும் நீங்கள் தலைமை பெற்று நடத்தும் திருநாட்களிலும், கும்பாபிஷேக நாட்களிலும் நமது சைவசமயப் பிரசங்கங்களை மிக்க சிரத்தையுடன் நடத்துங்கள். சமய உண்மைகளையும் ஒழுக்க முறைகளையும் துண்டுப்பத்திரங்கள் மூலம் பரவச்செய்யுங்கள். இவற்றிற் செலவிடும் பொருள் மிகப்பிரயோசனத்தைத்தரும். எந்த நற்காரியத்தையும் செய்தற்கு ஆற்றலும் பொருளும் அன்பும் உங்களிடத்துத் தான் இறைவன் அருள் செய்திருப்பதால் உங்களிடம் தான் கூறவேண்டியிருக்கிறது. நீங்கள் கவனித்தால் தான் நன்கு நடைபெறும். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நிறைக.

சுபம்! சுபம்!! சுபம்!!

பத்திராதிபர்.

# மந்திரவாதியார்க்கு அறிவுறுத்தல்.

ஐயா மந்திரவாதியாரே!

23-6-13-ல் வெளிவந்த வைசியமித்திரனில் எமது மருந்திற்கு மாற்றென நீயிர் வரைந்துள்ள வெற்றுரை வியாசம் ஒன்றைக் கண்டனம். அதன்கண், நீயிர் கூறுவதெல்லாம், வழக்கம்-ஒழுக்கம் என்பதும், இராசி-சம்மதி என்பதும், அவையிரண்டும் பேய்களாகா வென்பதும், "மாந்திரிகர்கள் தேவை தேவை" யெனத் தலைக்குறியிட்டு எழுதிய வியாசத்தைத் தழுவி யாம் யெழுதியுள்ளோமென்பதுமேயாம்.

மாந்திரீகர் தேவையென வியாசமெழுதியவர் நீயிர் எழுதியவாறு எல்லா வழக்கங்களையும் இராசிகளையும் பேய்களெனவெண்ணி அவைகளை விரட்டுவதற்கு மாந்திரீகர்கள் தேவை யென்று கருதவில்லை. அவர் கருத்து என்னவெனின், அவர் வியாசத்தில் "நாகரீகர்களென்ற அநேக மாந்திரீகர்கள்" என்றமையாலும், பேயாக உருவகப்படுத்தினமையாலும், ஓட்டுதற்குரியன அநாகரிகமானவழக்கமும் இராசிகளுமேயாம். சொல்லுவார் கருத்து வகை நோக்கிப் பொருள் கோடலேமரபு. அங்ஙனங் கோடற்கு அவர் பிற இடங்களிற் கூறுஞ் சொற்களே யேதுவாகும். ஆதலின் எதனையு முற்றும் ஆராய்ந்து முன்னோடு பின் முரணின்றிப் பொருள் கோடலே யறிவுடையார் கடன். நீயிர், அவர் கூறிய "நாகரிகர்கள் என்ற அநேக மாந்திரீகர்கள்" என்னும் வாக்கியத்தை யுற்றுநோக்காது எல்லா வழக்கங்களையும், இராசிகளையும் என்று பொருள் கொண்டது அறிவுடையார்க்குப் பெருநகை விளைப்பதாகும்.

நீயிர், ஒழுக்கம் இது, வழக்கம் இதுவென அவற்றின் இலக்கணங்களை வரையறுத்தறியும் ஆற்றலின்றி ஒழுக்கமே வழக்கமென மயங்கி அதற்கு "சரியையாசாரநடை யியல்பொழுக்கம்" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தைப் பிரமாணங் காட்டுகின்றீர். அச்சூத்திரத்தில் ஒழுக்கத்தின் பரியாய நாமங்களுள் ஒன்றாக வழக்கமென்பதுங் கூறப்பட்டுளதா? கூறாமையால் ஒழுக்கத்திற்கும் வழக்கத்திற்கும் வேறுபாடுண்டென்பது அச்சூத்திரத்தாற் போதரும். ஒழுக்கத்தின் பரியாயநாமங்களு ளொன்றாகிய ஆசாரத்துக்கு அறு

பந்த அகராதியில் வழக்கம் என்று பொருள் எழுதப்பட்டிருத்தி லால் ஒழுக்கம் வழக்கமாகு மென்கின்றீர். இங்ஙனம் ஒன்றன் பரியாயப் பெயரைக்கொண்டு வேறொரு பொருளைப் பெறக்கருதும் நீர், மேகத்தின் பரியாய நாமங்களு ளொன்றாகிய, கொண்டல் என் பது கீழ்காற்று என்னும் பொருளை யுணர்த்துகின்றமையால் மேக மென்பதற்கும் கீழ்காற்று என்னும் பொருள் கொள்வீர்போலும். நும் சொற்பொருளுணர்ச்சி மிக அழகாக இருக்கின்றது.

இனி, ஒழுக்க வழக்கங்களின் இலக்கணந்தான் என்னையெனின், (ஒழுக்கம்) மறை முதலிய நூல்களில் விலக்கியன தள்ளி விதித்தன கோடல், (வழக்கம்) முன்னவர் மேற்கொண்ட தொன்றனைப் பின்ன வரு மேற் கோடல் என்பதேயாம். இவ்வழக்கம் ஆன்றோரான் மேற் கொள்ளப்பட்டதாயின் அதனை அனுசரித்தலும், ஏனையோரான் மேற் கொள்ளப்பட்டதாயின் விலக்கலும் பின்னவராகிய அறிவுடை யார்க்குக் கடமையாகும். இவ்வாறு பகுத்துணர்தற்கு நுமக்கு மதி வலி யில்லாமற் போனது இயற்கையே யென்பது, நீர் "செயல்கள்" என்பதன் கீழ்ப் பொறித்த சொற்பொருள் வழுக்களால் யாவரு முணர்வர். அவ்வழுக்களை நுமக்கு எடுத்துக்காட்டினும் நும் அறி விற் பதிதல் அரிதென்று கருதி முன்னர் யாமெழுதாது விட்டோம். இப்பொழுது நடுநிலை பிறழா அறிவுடையார்க்கு நும் மதிவலிமை யளந்து காட்டற்குச் சில இங்கு எழுதுகின்றேம்.

நும் "செயல்களின்" கீழ் "மகரிஷிகளும் மகான்களும் மனத்துக்குப் பேயென்றும் குரங்கென்றும் தோணி யென்றும் பலவித நாமங்களைக் கொடுத்திருக்கின்றார்." என்றீர். மனத் துக்கு இந்நாமங்களைக் கொடுத்திருத்தல் நீர் வழக்கமாகப் படித்து வரும் பெயரகராதி அநுபந்த அகராதிகளில் யாண்டுக் கண்டீர்? "மனமெனுந் தோணிபற்றி" "மனமெனுமோர் பேய்க்குரங்கு" என் னும் பாசுரங்களைக் காட்ட முன் வருவீராயின் அவை உருவகங் களே யன்றி நாமங்களாகா. நாமம் உருவகம் இவைகளின் பேத முணராத நீர் "அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டுங், கொங் கை முகிழுங் குழற்காருந்—தங்கியதோர், மாதர்க் கொடியுளதான் மண்பா லதற்கெழுந்த, காதற் குளதோ கரை" என்னும் உருவகவ

ணிச் செய்யுளிற்போந்த கை, அடி, கண், கொங்கை, குழல் முதலிய வற்றிற்கு முறையே மலர், தளிர், வண்டு, முகிழ், கார் முதலியவை களும் நாமங்களாகும் என்று சொல்ல முற்படுவீர்போலும். இதனால் நும் மதிநுட்பம் இளம்பருவச் சிறாரானும் எள்ளற் குரிய தாமென் பதிற் றடையென்னையோ? இஃதொன்றோ "அருளென்னும் பகுத் தறிவு" என்றும், "ஆராய்ச்சியென்னுந் தியானம்" என்றும் தீட்டினீர். இச்சொற்களுக்கு இவ்வாறு பொருள் எந்நூலிற் சிரமப் பட்டுக் கண்டுபிடித்தீர்? அருள் என்பது தொடர்பு பற்றாது எல்லா உயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை எனவும், ஆராய்ச்சி என்பது ஒன்றன் உண்மை தெளிதற்குப் பல கருவிகளைக் கொண்டு சோதித்தல் எனவும் உணரும் ஆற்றல் நுமக்கு எப்பிறப்பிற் கிடைக்குமோ? இன்னும் பல வாக்கியப் பிழைகளுமுள. அவை களை யாராய்தல் மணற் சோற்றிற் கல்லாராய்தல் போலாம்.

"மாந்திரீகர்கள் தேவை யென்ற வியாசக்காரர் வேண்டுதலின் மேல் அவர் விருப்பின்படி "செயல்கள்" எழுதினோமென்கின்றீர். அவர் உம்மை வேண்டிக்கொண்டது பத்திரிகை வாயிலாகவா? நீவிர் அவரிடம் தனிமையில் யாம் எழுதுதலை மறுத்தெழுதக் கூடாதென்று கேட்டுக்கொண்டதற்கு உடன்பட்டுச் சொன்னமை யா? பத்திரிகை வாயிலாக வில்லாமையால் நீரும் அவரும் உடனுள வளாவியிருக்குங்காற் கூறினார்போலும். அஃதுண்மையாயின் எம் மறுப்பிற்கு அவரைக்காட்டி நீர் பின்வாங்கலாம். எமக்கு வாத விஷயத்தில் இலக்ஷியமேயன்றி எழுதினாரிடத்தின்று.

வழக்கம் என்பதற்கு ஒழுக்கநடையென்று நீர் எழுதியிருப்ப தில் நடையை யான் மறந்துவிட்டதாக எழுதுகின்றீர். முதற் பொருளாகிய நும் ஒழுக்கமே வழுவுங்கால் நும் நடையைப்பற்றி விசாரித்தன் மிகையே. நூல்வழக்கு உலகவழக்கு என்பவற்றினுள்ள வழக்கு-முறையென்னும் பொருடரும். இது நும்மதிக்குத் தோன் றாக் குறையே வழக்கம் என்பதும்-அதுவும் ஒன்றெனக் கூற நுமமை முற்படுத்தியது.

வழக்கத்தை யறவே நீக்க முயல்வாரோடு யாம் உடன்பட்ட தாக எழுதுகின்றீர். அங்ஙனம் முயல்வார் யாவர்? மாந்திரீகர்களை

வேண்டியவர் தீயவழக்கத்தை விலக்கவேண்டுமென்று கருதி யெழுதினரென்பது முன்னர் வெள்ளிடை மலைபோல் நிச்சயிக்கப் பட்டதாகும். ஆதலின் அவரை யொழித்து நீர் யாரைக் கண்டீர்; நுங்காட்சி வெளிப்படுத்தற் குரியதன்று போலும்.

யாம் "தள்ளுவன தள்ளிக் கொள்ளுவன கொள்க" என்று எழுதியது மாந்திரீகரை வேண்டியவர் விளம்பரத்தைத் தெரிந்து அவர் கருத்துநோக்கியே யென்பது முன்னரெழுதிய அவர் கருத்தின்ன தென்பதால் நன்கு விளங்கும். அங்ஙனமாகவும் எம்மைப் படித் துணராவில்லை யென்று நீர் கருதியது நுமக்குப் பத்திரிகையாராய்தலினுஞ் சத்திபோதா தென்பதைப் புலப்படுத்துகின்றது.

இதுவரை கூறியவற்றைச் சற்று அவகாசமாக ஆராய்ந்து உண்மைதெரிந்து கடைப்பிடித்து நடுநிலை பிறழாது நீர் ஒழுகுதலோடு நும்மைச் சார்ந்தார்க்கும் அறிவுறுத்துவீராக.

நும் வியாசத்தி னிறுதியிற் சில குறட்பாக்களை வரிசை வரிசையாக எழுதி அவற்றைக் கடைப்பிடிக்கக் கூறுகின்றீர். அப்பாக்கள் நீர் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு ஒரு சிறிதும் வேண்டாதனவென்பதும், அரிய விஷயங்களைத் தாங்குதற்குரிய வைசிய மித்திரனின் ஒருபாகம் பயனின்றி யொழிந்தது என்பதும், யாங் கூறாமலே யறிவுடையார் உணர்வர். பத்திரிகையில் நீண்டு எழுதிப் புகழ்பெற முற்பட்டீர்போலும். அந்நீட்சி நும் பெருமை மரத்தை வேரோடு களைதற்குரிய கோடரியின் நீட்சியாயிற்று. பல நிந்தை மொழிகளை யுப்யோகப் படுத்தியிருக்கின்றீர். அவற்றை யறிவுடையார் ஒரு பொருட்படுத்தாராதலின் எமக்கு நும் வாத விஷயமே இலக்ஷியமாகும். நிந்தை மொழிகளைப் பொருட்படுத்தி விடையளிக்க வருகின்றிலம்.

"நெய்யுண் பூங்குழன் மடவரா ளின்னெஞ்சும் வாது
செய்யும் பூசனுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசனுக் கெதிரலேன் மானம்விற் றுண்டியோ
டுய்யும் பாவைய ரேயுதற் கெதிரென வுரைத்தான்"

என்னும் பெரியோர் திருவாக்கைச் சிந்திப்பீராக.

இங்ஙனம்,

கரு. முத்து. அழகப்பசெட்டி.

# அண்ணாமலைச்செட்டியார் மறுப்புக்கு மறுப்பு.

அண்ணாமலைச்செட்டியாரே!

நீயிர் சென்ற வைகாசிமீ 20உ வெளிப்போந்த வைசியமித்திரனில், "கடவுள் வழிபாடு என்பதற்கு மறுப்பு" என்று நீண்ட தலைக் குறியிட்டு எழுதிய குறுகிய தொரு வியாச வெற்றுரைகளைப் பார்த்தேம். நாஸ்திகக் கொள்கையுடையார் போல இங்ஙனந் தலைக்குறியிட்டது மிகவும் அழகாயிருக்கின்றது. அவ்வியாசத்தின்கட் கடவுள் வழிபாடு என்பது துவிதம் என்றும், ஆன்மாவைத்தானாகத் தெரிந்தனுபவிப்பது அத்துவிதம் என்றும், இரண்டும் ஒன்றெனல் கூடாதென்றுங் கூறினீர். கடவுளை வழிபடுங்கால் வழிபடற்பாலனாகிய கடவுள் ஒரு பொருள். வழிபடுவோனாகிய ஆன்மா ஒரு பொருள் எனப் பொருளிரண்டாமென்பது யாவருமுணர்ந்ததே. இதற்கு மாறுபட நீர் கண்டதாக எழுதிய விஷயம்; "ஆன்மாவைத்தானாகத் தெரிந்தனுபவிப்பது அத்துவிதம்" என்பதேயாம். ஈண்டு, தான்என்பது சிவனைக்குறித்தலால் ஆன்மசப்தம் நுங்கருத்துப்படி கடவுளை யுணர்த்துவதாகும் ஆன்மா, பரமான்மா சீவான்மா என இருதிறப்படும். பரமான்மா கடவுளும் சீவான்மா உயிருமாகும். கேவல ஆன்மசப்தம் சைவசித்தாந்த நூல்களிற் சீவான்மாவைக்குறிக்கும். ஏகான்மவாத நூல்களிற் கடவுளைக்குறிக்கும். இங்கு ஆன்ம சப்தத்தாற் கடவுளைக் குறித்தமையானும், அக்கடவுளைத் தானாகத் தெரிந்தனுபவிப்பது ஏகான்மவாதக் கொள்கையாதலானும், நீயிர் சைவசித்தாந்தி யல்லீர் என்பதூஉம், ஏகான்மவாதக் கொள்கை யுடையீர் என்பதும் தெளிவாம். "இது நித்தியமாகிய உண்மைப் பொருள்" என்று ஆன்ம சப்தத்தாற் பெறப்பட்ட கடவுளைக் குறிப்பிடு முகத்தான் ஏனைய பசுபாசங்கள் அநித்திய மெனக் கொண்டீரென்பதும் மேற்காட்டிய நுங்கொள்கையை வலியுறுத்துவதாகும். இக்கொள்கையுடைய நீயிர் அத்துவித சபதத்திலுள்ள அகரம் எத்தனை பொருள் பயக்கு மென்பதும், சைவ சித்தாந்தம் எப்பொருளைக் கொண்டதென்பதும், ஏகான்மவாதம்

எப்பொருளைக் கொண்டதென்பதும், உணர்ந்திலீர் என்பது சைவ சித்தாந்த முறைப்படி செய்த உபந்நியாசத்தில் வாராத ஏகான்ம வாதக் கருத்தை மேற்கொண்டு கூறிய நும் சொற்களால் நன்குவிளங்கு கின்றது.

முப்பொருள்களையும் நித்தியமாகக் கொண்ட சைவசித்தாந்தத்தில் உயிர் கடவுளோடு முத்திநிலையில் இரண்டறக் கலந்தனுபவிக்குங்கால், பொருள்வகையானிரண்டும்கலப்பாலொன்றுமாமென்பதும், அக்கலப்பே அத்துவித மென்பதும் இங்ஙனம், பொருள்கொள்ள அகரம் அன்மைப்பொருளுணர்த்து மென்பதுந் தெளிவாம். இதன் விரிவைச் சிவஞானபோத முதலிய சைவ நூல்களிற் றெளிக. ஏகான்மவாத நூல்களில் அகரம் இன்மைப் பொருளுணர்த்தும். முக்தி நிலையில் உயிர் கடவுளிடத்து அத்துவிதக் கலப்புற்றுப் பேரின்பநுகருங்கால், உயிர் தான் வேறு கடவுள்வேறு என்னும் பேத வுணர்வின்றி அபேத வுணர்ச்சி யுள்ளதாகும். அவ்வளவே யன்றி யுயிரே கடவுளாதல் சைவசித்தாந்தமன்று. இக்கொள்கை ஏகான்மவாதத்திலுள்ளதாகும். இதனைச் சைவப்பெரியாரனைவரும் நியாயவாயிலாக மறுத்திருக்கின்றனர்.

“கடவுள் வழிபாடு” என்னும் உபந்நியாசத்தில் உபந்நியாசகர் சைவசித்தாந்த முறைப்படி பேசியதாகவே பிரசங்கக் குறிப்பில் விளங்குகின்றது. அங்ஙனமாகவும் அவ்வுபந்நியாசத்தில் உபந்நியாசகராற் கூறப்படாத ஆன்மாவை (கடவுளை) த்தான் (ஜீவன்) ஆகத் தெரிந்தனுபவிப்பது அத்துவிதம்” என்னும் விஷயத்தை மேற்கொண்டு முன் பின் முரணுகின்றதென்று நீர் கூறுதல், நுமக்குப் பத்திரிகை படித்தலினும் அறிவு நுணுகிச்சென்றிலதென்பதை வெளிப்படுத்துகின்றது.

உபந்நியாசகர் கடவுள் வழிபாடு என்னும் பிரசங்கத்தில், நானார் என்னுள்ளமார் என விசாரஞ் செய்யப் புகுந்தால் ஆன்மா ஒரு பொருளுண்டெனவும், இவ்வான்மாவைக் கருவிகரணங்களோடு கூட்டிக் கன்மப் பயனைப் புசிக்கச் செய்கின்ற கடவுளாகிய ஒரு பொருளுண்டெனவும், அக்கடவுளை வழிபடுதலிவ்விதம் என

வும், அதனாலாம் பயனிதுவாமெனவும், பிறவுங் கூறினரெனப் பிரசங்கக் குறிப்புக் கூறுகின்றது. நேரின மணியை நிரல்படக் கோத்தாங்கு மிக ஒழுங்காகத் தொடங்கி முடித்த உபந்நியாசத்தில் உண்மைபாராயாது அது பொருந்தாது இது பொருந்தாது என்று முன்னர் முத்துராமன் செட்டியாரென்பாரொருவர் கிளம்பி வழுமொழிகளாற் சில கூறியமர்ந்தார். இப்பொழுது நீயிர் சில பிழைமொழிகளான் மறுப்பொன்றெழுதிப் புகழ்பெற முற்பட்டீர். அங்ஙனம் அவர் பிரேரணை செய்யப்புகுந்ததும் நீயிர் ஆமோதிக்கப் புகுந்ததும் "விண்ணிலாதவன் விளங்கு நீடெல்லையை யூமன், கண்ணிலாதவன் கேட்டலுங் காண்டலுங் கடுக்கும்" என்பதற்கினமாயின.

அண்ணாமலைச்செட்டியாரே! இதுவரை நம் சிறு வியாசத்திலுள்ள பொருட் குற்றங்களிற் சில காட்டினேம். சொற் குற்றங்களிற் சிலவற்றையுங் காட்டிமுடிப்பேம். "ஆத்மாவைத்தானாகத் தெரிந்தனுபவிப்பது அத்துவிதம். இது நித்தியமாகிய உண்மைப் பொருள்" என்று நீர் தீட்டிய வாக்கியம் இரண்டனுள், இரண்டாவதன் முதலிலுள்ள இது என்னுஞ் சுட்டு தனக்கு அண்மையிலுள்ள தொன்றனை யன்றோ உணர்த்தல் வேண்டும். அங்ஙனமாயின், அத்துவிதத்தையா? அனுபவித்தலையா? தானாகத்தெரிதலையா? ஆன்மாவையா உணர்த்தியது? பொருள்பொருந்தாமையின் அண்மையிலுள்ள மூன்றனையும் உணர்த்தாது. சேய்மையிலுள்ள ஆன்மாவை யுணர்த்துமெனின், இடையே பல சொல் வந்தமையால் இவ்வான்மா என்று விளக்கி யெழுதல் வேண்டும். இதனால் நுஞ் சுட்டு ஐயச்சுட்டு ஆனமை தெளிவீராக. இஃதொன்றோ, "வெள்ளாள தீட்சதர்" என்றீர். இவ்விரு சொற்களும் நும் வாய்ப்பட்டு உருவழிந்தமை யுணர்ந்தீரல்லீர். "வேளாள தீக்ஷிதர் (தீட்சிதர்) என்று கூற வேண்டிய சொற்களை முறையே முதலைக் குறுக்கி ளகரம் விரித்தும், க்ஷி (ட்சி) என்னும் இகரத்தை அகர மாக்கியும், விகாரப்படுத்தினீர். இவ்வாறு விகாரப்படுத்தற்கு இலக்கணம் எந்த நூலிற் கண்டீரோ? அந்தோ! பிறரைப் பரிகசிப்பதாகச் சில சொற் கூறப்புகுந்து அச்சொற்களால் நீரே பரிகசிக்கப்பட்டீர். நும

க்குத்துணை செய்வதாக நும் வாயில் வந்து நுழைந்து நும்மை வஞ்சித்துப்புறத்தே சென்று எள்ளிய இச் சொற்களால், துன்புற்ற நீர் எம்மரபினராதலின் நும விஷயமாக எம் அநுதாபத்தை யிவ்வமயத்திற்காட்டக் கடமைபூண்டுளேம். நும்பாலுள்ள குற்றத்தை நீர் உணர்ந்துகொள்ள அசக்தராம்போது பிறர் குற்றமாராய நும் அறிவு எங்ஙனம் வலியுடையதாகும்?

சைவசித்தாந்த முறைப்படி நடைபெற்ற உபந்நியாசத்தில் அம்முறை யின்னதெனவும் ஏகான்மவாத முறை யின்னதெனவும் சிறிது அறியாது மாறுகின்றதென்று நீரே நீர் காட்டிய வேளாள தீக்ஷிதராயினீ ரென்ப துணர்வீராக. இதுவரை கூறியவற்றால், அண்ணாமலைச் செட்டியாரே! நீயிர் உபந்நியாசக் குறிப்பிலாவது எம் எழுத்திலாவது இல்லாத தொன்றைக் கூறி மறுப்பெழுதப்புகுந்தீர் என்பதும், கருவி நூலைச் சிறிதுங் கற்றிலீர் என்பதும், கருவி நூலாராய்ச்சி யில்லாத நீர் அத்துவித முதலிய தத்துவ ஆராய்ச்சியிற்றவறுதலியற்கையே யென்பதும் பெறப்பட்டன.

இனி, ஒழுங்காகப் படித்தவரிடத்துக் கேட்டேனும் எழுதுவீராயின், தக்கவாறு விடையிறுப்பேம்.

கரு. முத்து. அழகப்பசெட்டி.

# மாலினீ மாதவம்.

(௬௩-ம் பக்கத்தொடர்ச்சி.)

## அத்யாயம் 24.

## விவரங்கள்.

## Explanations.

தன்னயம் என்பது ஸகலப்ராணிகளின் ப்ரவ்ருத்திகளுக்கும் காரணமென்று ஸ்வார்த்த (Egaists) வாதிகளால் கூறப்படுகின்றது. அப்படியிருக்க, தன்னயத்தைக் கொஞ்சமேனும் கருதாது பராபிமானமே ப்ரதானமாய்க் கொண்டவர்கள், ஸஹாரா என்னும் பாலைவனத்தில், காணப்படும் ஓயஸிஸ் என்னும் சோலைகள் போல, ஆங்காங்கு சிற்சிலர் காணப்படுகின்றார்களே. இதனால் முன் கூறிய பொது விதிக்கு விரோதமாகின்றதல்லவா?

இப்படிப்பட்ட ஸர்வாபிமானி (Altruists) களின் மன நிலையைப் பகுதி (Analyse) செய்யும் மனவித்வான்கள் (Psychologists) அதன் காரணத்தின் தன்மையைப் பற்றிப் பலவாறு அபிப்பிராயப்படுகின்றனர். ஸ்வாபிமானம் என்பது மாத்ரம் பொதுவிதியல்லவென்றும், அதைத் தவிர, அதற்கு வேறான ஸர்வாபிமானம் என்ற இன்னொரு தத்வ (Element) மும் உள்ளதென்றும் ஸர்வார்த்த (Altruists) வாதிகள் கூறுகின்றார்கள்.

ஸ்வாபிமானந்தான் மூலகாரணம் (Fundamental motive) என்றும், அது, கால தேசவர்த்தமானங்கள், ஜன ஸஹவாஸம் பயிற்சி (Training) முதலான செயற்கை (Artificial) காரணங்களாலும் ஜன ஸங்கேதங்களாலும் (Convention and Artificial rules) ஸர்வாபிமானத்துக்குமே ஹேதுவாகின்றதென்றும், ஜன சமூகத்தில் ஸர்வானுகூலமான கார்யத்தைச் செய்வதால், ஸ்வானுகூலமும் விருத்தியாகின்றதென்றும் தெரிந்து தான், பரோபகாரஞ் செய்கிறான் என்றும், அவ்வாறு சில காலஞ் சென்றதும் காரணமே கார்யமாகக் கருதப்படும் (Means takes the Place of ends) என்னும் பஹாவிதியால் அவன் தன்னயம் மறந்து ஸர்வாபிமானியாகின்றான் என்றும் ஸ்வார்த்த (Egaists) வாதிகள் கூறுகின்றார்கள். இதற்கு உதாஹரணம், ஸகல சுகத்துக்கும் இன்றியமையாததென்று தேட-

ப்படும் பணம் ஸ்வயமாகவே யாதொரு சுகமும் உண்டுபண்ண சக்தி யற்றதாயினும், பணமே பெருஞ் சுகமென்று பாது காக்கும் பேதையர் பெரும்பான்மையோர் உளரல்லவா?

இச்சித்தாந்தத்தின் உண்மையும் பலவாறுதோன்ற அன்றுமாலை பாலூர் மஹாராஜா ஜாகையில், நமது கதாபுருஷர்கள், தங்கள் அனுபவங்களைப் பற்றி பரஸ்பரம், ஸம்பாஷித்துக் கொண்டு, ஸந்தோஷமடைந்து கொண்டிருந்தார்கள். ஆமாம், ஸந்தோஷந்தான், துக்க நிவர்த்தியும் சுகானுபாவமும் சந்தோஷ காரணங்களல்லவா?

இச்சம்பாஷணைகளைச் சுருக்கமாக எழுதுவோம். தினகரன் தெரிவித்துக் கொண்டது:—

'நான் அன்று மாலை' மாதவனும், மாலினியும் சிங்கார வனத்திலிருக்கக் கண்டதும் எனக்கு அடங்காத் துயரம் முதல் முதல் ஏற்பட்டதாயினும், கடைசியாக இதெல்லாம் ஈசுவர சங்கல்பமே யொழிய வேறல்ல வென்று எண்ணி, என் புத்தியீனத்தைப் பலவாறு நொந்துகொண்டு, அவ்வனத்தில் ப்ரமை கொண்டவன் போலத் திரியலானேன். அத்தருணத்தில், கள்ளன் கோட்டைத் தலைவர்களால் விரட்டப்பட்ட ஓர் காட்டுப்பன்றி நான் இருக்கு மிடம் நோக்கி வந்தது. உடனே நான் என் வாளை உருவிக்கொண்டு, அதைத் தகைந்தேன். பன்றி வேகமாய் என் மீது பாய, நான் நிலைதவறி யருகிலிருந்த ஓடையில் வீழ்ந்து மூர்ச்சையானேன். நான் விழிக்கும்பொழுது இரவு சுமார் 10 மணி யிருக்கலாம், கள்ளன் கோட்டையிலிருக்கக் கண்டேன்".

மாதவன் செய்தி:—

"தினகரனைப் பன்றி தாக்கியதைக் கண்ட நான் சற்று முன்னேர்ந்த விரோதத்தை முற்றிலும் மறந்து அவனைக் காத்தற் பொருட்டு பன்றியை எதிர்த்து வெகுதூரம் சென்றேன். கடைசியாய் அதை எதிர்த்து, அதன் விலாவில் என் கத்தியால் குத்தி இழுக்கையில் என் கத்தி ஒடிந்துவிட்டது. ஒடிந்த பிடியை எறிந்து விட்டேன். நல்லவேளை, பன்றியும் இறந்துவிட்டது. உடனே தினகரனைத்தேடி வந்த வழியே திரும்பினேன். தினகரனைக் காணேன். ஒருவேளை அரண்மனை சென்றிருப்பானென்று அரண்மனைவந்துசேர்ந்தேன்.

கள்ளன் கோட்டைத்தலைவர் வசம் தினகரன் அகப்பட்டு விட்டானென்பது எனக்குத் தெரிய மாட்டாது. இந்தத் தகவல் கொடுக்க முடியாவண்ணம் என் புத்தியே மாறி, எனக்கும் வாழ்வில் ஓர் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இதைப்பற்றி விவரமாய்த் தூண்டிக் கேட்கும் அபிமானமும் பொறுமையுமுள்ள உற்ற நண்பர் யாவரும் என்னிடம் வரவில்லை. நான் ஜாமீனில் இருந்த காலத்தில் என் நண்பர் யாரும் என்னைப் பார்க்க முடியாவண்ணம் அவ்வளவு பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. மணிபுரம் ஜமீன்தார் மாத்திரம் என்னை யடிக்கடி வந்து பார்த்து மாலினியை நான் விவாஹம் செய்யாது மறுத்து விட்டு இப்ரதேசத்தை விட்டு எங்கேயாவது கண்ணுக் கெட்டாத் தேசத்துக்கு ஓடிப்போவதாய் வாக்களித்தால் என்னை எப்படியாவது இவ்வாபத்தினின்றும் பணத்தாலும் மற்ற உபாயங்களாலும் தப்புவிப்பதாய்ச் சொல்லி நச்சுக் கொண்டிருப்பார்.

நான் ஓடிப்போக இணங்கவில்லை. ஓடிப்போனால், என்மேலுள்ள சந்தேகம் உறுதியாய் விடும். மேலும் க்ரிமினல் குற்றத்துக்குக் காலாவதிபு மில்லாததால், இன்றைக்குத் தப்பினும் என்றைக்காவது அகப்பட வேண்டியது தானே என்ற பயத்துடன் எவ்வளவு காலங் கழிப்பது தவிரவும் தினகரன் மறிக்க வில்லை என்று எனக்கு நிச்சயமாய்த் தெரிய வந்ததால், அவனைப்பார்த்து, என் நிர்த்தோஷ (Innocence) த்தை ஸ்தாபித்து விட்டு, இவ்வளவு ஆபத்துக்குமிடமான இவ்விடத்தை விட்டகலலாமென்பது என் எண்ணம். மாலினீ என்னை விவாஹம் செய்ய மன மில்லாது தர்மஸங்கடத்துக்ககப்பட்டுத் தவிக்கிறாள் என்று மணிபுரம் ஜமீன்தார் சொன்னார். "என்னால் ஏன் அவளுக்கு இவ்வளவு தர்மஸங்கடம்?" என்ற அனுதாபத்தால் தான் அந்தக்கடிதம் எழுதி அவர் மூலமாய் அனுப்பினேன். அக்கடிதத்தைக் கொண்டு, அவ்வளவு கல்பனைகள் அவரும் போலீஸ் அதிகாரிகளும் செய்வார்களென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஸெஷன்ஸ் கோர்ட்டில் மணிபுரம் ஜமீன்தார் வாக்குமூலம் முழுமையும் பொய். நான் கொலை செய்ததாய் ஒருவரிடமும் ஒப்புக்கொள்ள வில்லை.

ஆபத்து நேர்ந்தது முதல் எனக்கு மாணதண்டனை விதித்த பிறகு தான் புதுஜெயிலில் இம்மஹானுபாவன் பரதேசியாரைக்

கண்டேன். அவர் யுக்தியாய்ப் பல கேள்விகள் கேட்டு என் விடைகளின் ஆதாரங்களைக் கொண்டு இவ்வளவு வேலைசெய்திருக்கின்றார். "தெய்வம் புருஷகாரேண" என்றாற்போல இம்மஹானுபாவனில்லாவிடில் நான் இதுவரை உயிர்த்திருப்பது அஸாத்யம்".

இந்நிலைமையில்பரதேசிபார் வெளியே யிருந்து வெகு அவஸரமாய் ப்ரவேசித்து ஓர் கடிதத்தைப் பாலூர் ஜமீன்தார் முன் எறிந்து இதை வாசிக்கச் சொல்லுங்களென அதைத் தினகரன் பின்வருமாறு வாசித்தான்.

கள்ளன் கோட்டைத் தலைவரவர்களுக்கு

"என் உயிர் நண்பர்களே!

உங்கள் தலைமுறைதத்துவமாயும், எங்கள் தலைமுறை த்த்துவமாயும் உங்கள் குடும்பமும், எங்கள் குடும்பமும் ஒருவருக் கொருவர் எவ்வளவோ அன்யோன்யமாயும் அன்புடனும் வாழ்ந்து வந்த விஷயம் உங்களுக்குத் தெரியாததில்லை. இப்பொழுதும், என் பிராணன் எல்லாம் நீங்களே. அப்படியிருக்க என் மீது நீங்கள் இவ்வளவு தயவில்லா திருப்பது என் காலக் கொடுமையே. 20 வருஷத்துக்கு முன் நடந்த கொலையை யறிந்திருக்கும் அப்பெண்பிள்ளையை இன்னும் நீங்கள் வேலையைச் சாய்க்காமல் வைத்துக்கொண்டிருப்பதாய்த் தெரிய வருகிறது.

மாலினியை நீங்கள் விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணமிருப்பதாய் எழுதியிருந்தீர்கள். உங்கள் இஷ்டத்துக்கு விரோதமாய் நான் என்றைக்காவது நடந்ததுண்டா? மாதவன் நாளையதினம் தூக்கில் மடிந்து விடுவான். உங்கள் வசத்திலிருக்கும் தினகரனையும் நீங்கள் வேலை சாய்த்து, இப்பொழுது நடந்திருக்கும் மாயம் ஒன்றும் வெளியாகா வண்ணம் செய்து விடுவீர்களானால், மாலினியை நீங்கள் அபஹரித்துச் செல்ல வேண்டிய உபாயம் செய்து விடுகிறேன். எல்லாம் உங்கள் தயவு.

தங்கள்
அன்புள்ள
கிருஷ்ணராஜன்

இக்கடிதம், மணிபுரம் ஜமீன்தாரால் எழுதப்பட்ட தென்றும், பரதேசி, தினகரனைத் தேடி பகல் வேஷம் பூண்டு, கள்ளன் கோட்டைசென்ற நேற்று மாலை தலைவர்கள் கையினின்று வீழ்ந்தபோது இவர் வசமாச்சுதென்றும் நமது நண்பர்கள் அறிவார்கள்.

இக்கடிதத்தை வாசித்ததும் ஆங்குள்ளோர் மனோபாவத்தை எவ்வாறு வர்ணிப்பது! மன்மானது ஆழமான கடலுக்கொப்பானது. கடலினுள், திமிங்கலம் முதலான ஜலஜங்களும் பவளப்பாறைகள் அந்தர் வாஹினிகள் (Under currents) முதலான அபாயகரங்களுமிருப்பது போல் வஞ்சகர் மனமும் எத்தனையோ கொடிய எண்ணங்கள் கொண்டிருக்கும்.

அதிகமாய் வளர்ப்பதேன்? நமது பரதேசியார் அச்சிறு சபையை நோக்கி, "நண்பர்களே! நான் ஒரு புதிய விஷயம் சொல்லப் போகிறேன். அது ஆச்சர்யமானது. அதாவது நமது மாதவன், இம்மணிபுரம் ஜமீன்தாரின் தமயன் புதல்வன்"

ஆங்குள்ளோர் யாவரும் ஆச்சர்யத்தால் நடுங்கினார்கள்.

பிறகு ஆதியோடந்தமாய் நமது மாதவனுடைய பூர்வ விருத்தாந்தங்களை விவரித்தார்.

பாலூர்ஜமீன்தார்—தாங்கள் சொல்லுவதை நான் நம்பாமல் கேட்கவில்லை. உண்மை எப்படியிருப்பினும், தாங்கள் சொல்லுவதை சட்டப்படி நிரூபிக்க முடியுமா? வாஸ்தவத்துக்கும் சட்டருஜூவுக்கும் வித்யாஸமிருக்கின்றதே. இதை ருஜூப்படுத்த முடியா நிலைமையில் இவ்வாறு சொல்லித்திரிந்தால், 'ஏதோ பிதற்றுகின்றான்' என்று உலகத்தார் நகைக்க இடமாகுமல்லவா?

பரதேசி—மஹாராஜ்! நாளைக்காலைக்குள் இதை ருஜூப்படுத்தமுடியும். அவ்வாறு செய்து முடிந்தால், இப்பொழுது கொலைபாதகனுய் விளங்கும் கிருஷ்ணராஜன் கதியைப்பற்றி என்ன தீர்மானிக்கின்றீர்கள்.

தினகரன்—(கோபாவேசத்துடன்) அப்பாதகனைத் தூக்குக்கனுப்ப வேண்டியது தான். பழிக்குப் பழி வாங்குவது பாவமோ?

பாலூர் ஜமீன்தார்—"அப்பா! தினகர! பதறுதே! அவன் பாதகன் தான். ஆயினும் நாமும் பழிக்குப்பழி செய்வோமாகில் அவனுக்கும் நமக்கும் வித்தியாசமென்ன? நாமும் அவன் நிலைமைக்கு

இறங்கிவிடுவோமல்லவா?" 'அப்பா மாதவ! இனி நீ தான் சொல்ல வேண்டும். நமது பரதேசி ஸ்வாமிகள் சொல்லுகிறபடி நேரிட்டால், உன் சிற்றப்பனுகிய—"

மாதவன்—மாமா! எவ்வளவு பாதகனுயினும், கிருஷ்ணராஜா என் சிற்றப்பன். என் தாய் தந்தையர் இனி உயிர்த்துவரப் போகின்றூர்களா? நான் பட்ட கஷ்டத்துக்கு அவரை ஹிம்ஸித்தால் திருப்தியாய்விடுமா? நாம் இக்கொடும் ஸம்பவங்களின் காரணங்களை வெளியிடுவோமாகில் உலக முள்ளவரை மணிபுரம் ஜமீன்தார் வம்சம் கொலைக்கார வம்சம் என்ற அபவாதம் என்றென்றைக்கும் ஸ்தாபனமாய்விடும்.

தினகரன்—அப்படியானல், உனக்குக் கிடைக்கும் ஜமீன் தாரியைத் துறந்து, அப்பாதகன் கைகளில் மறுபடி ஒப்புவித்துவிட்டுக் காசியாத்திரை போகின்றுயா?

மாதவன்—ஏதோ! எனக்கொன்றும் தோன்றவில்லை, மாமா தான் சொல்லவேண்டும்.

பாலூர் ஜமீன்தார்—எனக்கென்ன தெரிகின்றது. இவ்வளவுக்கும் ஸூத்ரதாரன் போலிருந்து இவ்வளவு ஆபத்துக்களினின்றும் தப்புவித்த பரதேசியாருக்குத் தெரியாத யுக்தியா நாம் சொல்லப் போகின்றோம். அவாள் தான் சொல்ல வேண்டும்.

பரதேசி—மாதவன் சொல்லுவது ந்யாயந்தான். இன்று இரவு அவனைச் சந்தித்து மாதவன் தன் தமையன் மகனென்றும், ஜமீன்தாரிக்கு அடுத்த வாரிஸ் எனவும் அது தனக்கு இப்பொழுது தான் தெரியவந்த தெனவும் ஒப்புக்கொள்ளச் சொல்லி கூடிய சீக்கிரம் குறிப்பிடும் தினத்தில் ஜமீன்தாரியை மாதவனுக்கு தானே யிருந்து பட்டங்கட்டி வைத்து விட்டு, தகுந்த ஜீவனம்சத்துடன் உத்தர இந்தியாவில் காசி நகரத்தில், சன்யாசியாய் ஒழிவுடன் காலங் கழிப்பதாய்ப் பேர் செய்து விடுகிறேன். அவருக்கு என்ன மாதம் கொடுக்கலாம்.

தினகரன்—ஒருசாண் கயிறும், ஆறடித்தரையுந்தான்! என்ன கொடுப்பது வயிறெரிகையில்?

மாதவன்—ரூபாய் 400 வரை

பாலூர் ஜமீன்தார்—சரிதான்

'சரி அவ்வாறே செய்கிற' தென்ற தீர்மானத்துடன் அச்சிறுசபை, அன்று மாலை கலைந்தது. (இன்னும் வரும்)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

# மோன மென்பது ஞான வரம்பு.

இத்திருவாக்கு ஔவைப் பிராட்டியா ரருளிச் செய்தது. குழந்தைகள் சொற்களைச் சேர்த்துச் சொல்லிப் பழகு முறையிலேயே அக்குழந்தையினறிவு மேம்படுந்தோறு மேம்படுந்தோறும் பொருள்களும் மேம்பட்டுத் தோன்றும்படியான சொற்களை யமைத்துச் சொல்லி வைப்பதே நம் முன்னோர்களி னியல்பாம். அவ்வாறே அம்மையாரும் இளமைப் பருவத்திற் கல்விகற்குஞ் சிறுமகாருக்கு அப்பருவத்தில் சொல்லிப் பயில்வதற்கும் வயதும் நூலறிவு முதிர்முதிர உண்மைப் பொருள் விளங்கி இன்புறுதற்கு மித் திருவாக்கை யருளிச் செய்தனர்.

இதன் பொழிப்புரை:—"மௌன மென்று சொல்லப்படுவது ஞானத்தினெல்லை." என்பது. இனி இதன் விரிவுரையை ஆராய்வாம். மோனம் பல்வேறுவகைப்படு மெனவும், அவற்றுள் மோன மென்று சிறப்பித்துச்சொல்லப்படுவதிதுவெனவுந் தோன்ற மோன மாவ தென்னாது மோன மென்பது என்றார். என்பது, எனப்படுவ தென்பன ஒரு பொருட் சொற்கள். அவை ஒரு பொருளின் சிறப்பிலக்கணத்தை யுணர்த்தும். ஒவ்வொரு பொருட்கும் பொதுவிலக்கணம், சிறப்பிலக்கணமென இரண்டிலக்கணங்களுள. மனிதனுக்கு சரீர அமைவு பொதுவிலக்கணம். நல்வினை இன்னது தீவினை இன்னதென ஆராயும் மன வுணர்வினமைவு சிறப்பிலக்கணம். பொதுவிலக்கணம் மிருகாதிகளினின்று விலக்கும், சிறப்பிலக்கணம் அறிவில்லாரினின்று விலக்கும். ஒரு ஊரில் இவன் தான் மனிதனெனப்படுவானென்ற விடத்து இவனொருவனே மனிதனுக்குரிய சிறப்பிலக்கணமாகிய பகுத்தறிவுடையவன்; ஏனையோ ரன்ன ரல்ல ரென்னு முலகவழக்கானும், எனப்படுவது என்னுஞ் சொல் சிறப்பினையுணர்த்தி நிற்கு மென்பது தெளியக் கிடக்கும். இதனை "அறனெனப்பட்டது" எனவும் "வாய்மை எனப்படுவது" எனவும் ஆசிரியர் திருவள்ளுவரருளிய திருவாக்குகட்கு முறையே "அறனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" எனவும் "வாய்மை யென்று சொல்லப்படுவது" எனவும் ஆசிரியர் பரிமேலழக ருரையருளி "ஊரெனப்படுவதுறையூர்" என்னுமேற்கோளுங் காட்டினமையானுந்தெளிக.

ஆகவே மோன மென்பதென் றதனாலேயே மோனம் பொது
விலக்கணம், சிறப்பிலக்கணமெனப் பலவேறு வகைப்படு மென்பதூ
உம், அவற்றுள் சிறப்பித்துக்கூறுஞ் சிறப்பிலக்கணமுடைய மோன
மென்பது யாதென்பதூஉம் கருதவரும். வரவே அதுபற்றி மோனத்
தின் வேறுபாடுகளை யுணர்தல் கடமையாதலின் அவற்றை யாராய்
வாம்.

மோன மென்னினு மௌன மெனினு மொக்கும். மௌனமென்
பது சும்மாவிருத்தல். அதாவது ஒன்றுஞ் செய்யாதிருத்தல். செய
லுக்கெல்லாந் தன்னுள்ளக் கருத்தைப் பிறருக் கறிவிப்பதற்கும் பிற
ருள்ளக்கருத்தைத் தானறிவதற்கு மேதுவாகிய வாக்கே பிரதானம்.
அதாவது பேசுதல். ஆதலால் பேச்சை நிறுத்தினால் செயல் நின்று
விடும். இதுவே மௌன மென்பா ரொரு சாரர். இவர் கொள்கை
யின்படி வாய் பேசாது மௌனமா யிருத்தலினால் ஒன்றுஞ்செய்யா
திருத்தல் கூடுமோ வெனின்? அவ்வா றிருக்குங் காலத்துங் கண் பார்த்
தற் றொழிலையும், செவி கேட்டற் றொழிலையும் , மூக்கு மணத்தற்
றொழிலையும், சரீரம் பரிசித்தற் றொழிலையும் அதாவது தீண்டினலை
றிவதையும், நாக்கு சுவையறிதற் றொழிலையும் மனம் நினைத்தற்
றொழிலையும் செய்கின்றமையால் வாய் பேசாத மௌனத்தா லொன்
றுஞ் செய்யாதிருத்தல் கூடாது.

இனி இந்திரியங்கள் தத்தம் விடயங்களை யறியாதிருக்கும்படி
மனத்தை அகத்தில் யாதானுமொரு குறியின்கண் நிறுத்துவதே
மௌன மென்பா ரொரு சாரர். இவ்வாறு நிற்றலினு லொன்றுந்
செய்யாதிருத்தல் கூடுமோ வெனின்? மனம் பற்றுதற்கு இடமாகிய
குறி தேகத்து ளொரு பகுதியே யாதலினாலும் அதாவது அகத்து
விடய மாதலினாலும் பற்றி நிற்குந் தொழி லுண்மையாலும் பற்று
தற்றொழில் நின்ற காலத்து தேகமசைவுற்று இந்திரியங்களின் வழி
யாய் புறத்து விடயங்களை யறியவரு மாகையாலும் இந்திரிய அடக்
கமாகிய மௌனத்தா லொன்றுஞ் செய்யா திருத்தல் கூடாது. இது
பற்றியே "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்
லாத வர்க்கு" என்றருளினர் பொய்யில் புலவர்.

இனி தேகத்தினுள்ளோரிடத்தைப் பற்றுதலுமின்றி பற்றப்
படுமக்குறியேயாய் மனமடங்கக்கட்டைபோற் றேகமசைவின்றியிரு

ந்தமே லெளன மென்ப ரொருசாரார். இவ்வாறு நிற்றலினு லொன் றுஞ் செய்யா திருத்தல் கூடுமோ வெனின்? எவ்வளவு நாள் உடல் கட்டை போலிருப்பினு மவ்வுடலா லனுபவிக்க வேண்டிய வினைப் பயனை அநுபவித்தற் பொருட்டு அடங்கி யிருந்த மனங் கலைய வுட லசைவுறும். அசைவுறவே மனத்தாலு மிந்திரியத்தாலுந் தொழில் நிகழும். ஆதலா லுடல் கட்டைபோ லிருத்தலினு லொன்றுஞ் செய்யா திருத்தல் கூடாது. இதுகாறுங் கூறிய வாக்குமௌனம், காயமௌனம், காட்டமௌன மென்னு மூன்றும் பொதுவிலக் கணமுடைய மௌனமாம்.

இனிச்சிறப்பிலக்கணமுடைய மௌனம் வருமாறு:—

உடல், இந்திரியம், மன முதலிய யாவு முயிரையன்றி இயங் குதல் கூடாமையின் சடம் அதாவது அறிவில்லாதன. உயிர் தானெ ண்ணிபவாறே யுடல் முதலியவற்றை இயக்கமுடியாமையானும், அறி விக்க அறியுந்தன்மை யுடையதாதலினாலும் சுதந்தரமில்லாத அறி வையுடையது. இவ்வாறாதலின் உயிர் தானே உடலையெடுத்துக்கொள் ளவு முடல்தானே உயிரை வந்து கூடவு முடியாவாம். இனி இவ் விரண்டுங் கூடப் பெறுதல் இவ்விரண்டின் வேறாகிய சுதந்தரமு முற் றறிவு முடைய கடவுளாலேயாம். அக்கடவு ளிவ்விரண்டினையுங் கூட்டுவித்து உயிர்தோறு முண்ணின் றறிவித்தா லன்றி உயிர்களறி யா. அவ்வா றறிவிக்க அறியுங்கா லறியப்படும் பொருள்கள் சட மாதலின் அப்பொருள்களில் கடவுளுடைய பிரகாசம் நிறைந்திருந் தாலன்றி பொருள்க ளறியப்படமாட்டா. இவை யெது போல வெனின்? கண் ணொளியுடனும் பொருளுடனும் சூரிய னொளி கலந் தாலன்றி கண் பொருளையறியவும் பொருள் விளங்கவு முடியாதவாறு போலென்க. ஆதலின் உயிர் வாக்கினாலாவது, இந்திரியங்களினாலா வது, மனத்தினாலாவது ஒன்றைச் செய்வதும் அச்செயலுக்கு முன் னிலையாகப் பொருள் விளங்குவதுங் கடவுளாலேயா மென்பது துணிவாம்.

ஆதலால் செயலில் யான் செய்தேனென்னு மகங்காரத்தையும், பொருளில் எனதென்னு மபிமானத்தையும் விட்டு "எப்பொருள் அந்தற்றினு மப்பொருளைப் பார்த்தங் கெய்து முயிர்களைக் கண்

டிங் கவ்வுயிர்க்கு மேலாம், ஒப்பிலருள் கண்டுசிவத் துண்மை கண்டிங் குற்றதெலா மதனாலே பற்றி நோக்கி" என்ற உண்மை நெறிவிளக்கத் திருப்பாசுரத்தின்படி எல்லாச் செயலுஞ் சிவன் செயலாய் எல்லாப் பொருளுஞ் சிவப் பொருளாய்ச் சீவனாகிய தா னருளிற்கலந்து அதுவாய்த் தன் செயலற்றிருத்தலே மௌனத்தின் சிறப்பிலக்கணமாம். இதுபற்றியே "கண்டனவெ லாமோன வுருவெளி" யெனவும் "ஐந்துவகை யாகின்ற பூதமுத லானதமு மடங்க வெளியாகவெளிசெய், தறியாமை யறிவாதி பிரிவாக வறிவார்க ளறிவாக நின்ற நிலையில், சிந்தைபற நில்லென்று சும்மா விருத்தி" எனவும் சிவாநுபூதிச் செல்வராகிய ஸ்ரீ தாயுமான சுவாமிகளருளிச் செய்வாராயினர். இந்நிலையில் தான் ஒன்றுஞ் செய்யா திருத்தல் சித்திக்கும். இதுவே மௌனமென்று சிறப்பித்துக் கூறப்படும் என்பதுதோன்ற அம்மையார் மோன மென்ப தென்றார்.

இனி ஞானமாகு மென்றது ஞான வரம்பு என்றது மோனம் போலவே ஞானமும் பலவேறு வகைப்படுமென்றும், அவற்றுள்முடிவாகிய ஞான மிது வென்றும் விளக்குதற் பொருட்டேயென்க. வரம்பு என்பது வரப்பு என்று இக்காலத்து வழங்கி வருகின்றது. அது ஒரு பொருளி னெல்லையைக்குறிக்கும். எல்லையென்றதனாலேயே பொருள் விரிவாயுண்டென்பது தானே விளங்கும். ஆகவே ஞான வரம்பென்றதனால் ஞானமும் பலவேறுவகைப்படு மென்றறிக. ஞானம், அறிவு, உணர்வு என்பன ஒரு பொருட் சொற்கள். அது பாச ஞானம், பசுஞானம், பதிஞான மென மூத்திறப்படும். எனதென்னு முணர்வு பாச ஞானம். யானென்னு முணர்வு பசுஞானம். யானெனதென்னு மிவ்விரண்டு மற்று எல்லாம் சிவமா யறிதல் பதிஞானம். முன்னைய விரண்டு ஞானங்களு மொன்றனை யறியுங்கால் பிறி தொன்றனையறியாமலு முன்னறிந்த தொன்றனை மறந்தும் அறிந்த பொருளி லமையாது பிறிதொன்றை யறிய வேண்டுவதில் விருப்பமுடையனவாயும் நிலைபேறின்றி விளங்கும். பின்னைய பதிஞானம் கடவுளின் வேறு யறியப்படும் பொருளில்லாமையா லப்பொருளி லமைந்து அதனின் வியாப்பியமான எல்லாப் பொருளு மிதைநோக்க ஒப்பு முயர்வுமற்றமையால் பிறி தொன்றை யறிய வேண்டு மென்ற விருப்பமின்றி நிலைபேறுடையதாய் விளங்கும். ஆதலி னிப்பதி ஞானமே ஞான

த்தி னெல்லையாகும். கடவுட் பொருளிற் கலந்து அதுவா யிருத்தலாகிய மோனம் இப்பதிஞானமே யென்பது தோன்ற ஞானவரம்பு என்றார்.

ஆயின் மோனமும் ஞானமும் ஒரு பொருண்மேலனவெனலையற்க. ஒரு பொருண்மேலனவாயின் ஒன்றே கூறுதலமையும். தேற்றத்தின் பொருட்டு இரு மொழி கூற லமையாதோ வெனின்? அமையாது. அங்ஙனங் கூறுங்கால் முன் மொழியையே பின்னும் அடுத்துக் கூறுவது வழக்கு. அதாவது "மலையே மலையே" என்பதுபோல. ஆகவே மோனத்திற்கும் ஞானத்திற்கும் வேறுபாடுண்டென்று கருதவேண்டும். அவ்வேறுபாடாவது மோனம் பயனும் ஞானம் சாதனமுமாம். சாதனமும் பயனும் ஒன்று போலத் தோற்றினும் சாதனம் பழகுதலும் பயன் பழகியவாறே நிற்றலுமாகிய வேறுபாடுடையன வென்பதை நுண்ணுவர்வாற் கண்டுகொள்க. இது பற்றியே "ஞானமாவது வீடு பயக்கு முணர்வு" என்றனர் உரையாசிரியர் பரிமேலழகரும்.

---

## முடிவுரை.

---

மோனம், மௌனம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்பதூஉம், அது பொதுவிலக்கணம், சிறப்பிலக்கணம் என இருதிறப்படு மென்பதூஉம், அவற்றுள் பொதுவிலக்கணம் வாக்குமௌனம், கரணமௌனம், காட்ட மௌனம் என முத்திறப்படு மென்பதூஉம், சிறப்பிலக்கணம் அறிவு கடவுளருளிலழுந்தி அதுவாய் நிற்றலென்பதூஉம், இதுவே மோனமெனச் சிறப்பித்துக் கூறப்படு மென்பதூஉம், ஞானமும் பாசஞானம், பசுஞானம், பதிஞானமென முத்திறப்படு மென்பதூஉம், அவற்றுள் பதிஞானமே ஞானத்தி னெல்லை யென்பதூஉம், இந்த ஞானமே சிறப்பித்துக் கூறும் மோனம் என்பதூஉம், ஆயினும் ஞானம் சாதனமும் மோனம் பயனுமா யிருக்கு மென்பதூஉம் பிறவுமாம்.

இங்ஙனம்

பொ. முத்தையபிள்ளை.

---

# கமலினி.

---

## அங்கம் I : களம் I.

இடம்:— நெல்வேலியாளும் சிற்றரசன் வீரகேசரியின் அரண்மனைத் தோட்டம்.

காலம்:— மாலை.

**கமலினி** (தனியே வருகிறாள்.) என்னே என் விதிவசம்! முன்செய்த பாவத்தினால் சிறுவயதிலேயே என் அன்னையை இழந்து அன்னையின் அன்பென்பது இவ்விதமிருக்குமென்று சிறிதும் உணராமலேயிருந்த என்னை என் தகப்பன் மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தார். 'என் துர்ப்பாக்கியத்தினாலேயே அவரும் இரண்டு வருடங்களுக்குமுன் என்னை அநாதியாய் விட்டுவிட்டுக் காலஞ்சென்றுவிட்டார். அவர் இவ்வரண்மனை வயித்தியரா யிருந்தபடியால் அவரிடத்திலிருந்த அபிமானத்தாலும் நான் திக்கற்றவளாயிருந்த படியாலும் இவ்வூர் மன்னனது தாய் என்னை என் தகப்பனிறந்த நாள்முதல் இவ்வரண்மனையிலேயே வளர்த்து வருகிறார்கள். அப்படி வளர்ந்து வருவதில் எனக்கு யாதொரு குறைவுமில்லை. மன்னனது தாயும் என்னைத்தான் பெற்றெடுத்த பெண் போலவே பாவிக்கின்றார்கள். மன்னனும் என்னைத் தன் சகோதரியாகவே நினைக்கின்றார். மற்றைய வேலைக்காரர்களும் குடிகளும் அவ்வண்ணமே வித்தியாசமின்றி நடத்தி வருகிறார்கள். அப்படி யெல்லாமிருந்தும் என் மனம் திருப்தியடையவில்லை. எப்பொழுதும் கவலை யடைந்து கொண்டேயிருக்கிறது. யாது காரணமென்று யோசித்துப்பார்த்தால் (அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு மெதுவாக) இவ்வூர் மன்னன் என்னைத் தன் சகோதரி யாகப் பாவிப்பதே எனக்கு இவ்வளவு கவலையைக் கொடுக்கிறது. சிறுபிராயமுதல் ஒன்றாய்க் கூடிவிளையாடிக் கொண்டிருந்தோமாதலால் அவர் அப்படி என்னைக் கருதுகிறார்போலும். என்மனமோ அப்படி நினைக்கவில்லை. இப்பொழுது கொஞ்சகாலமாய் அவரைக் காணுந்தோறும் என்மனம் நாணுகின்றது. அவர்கை என் மேல் பட்டால் உடம்பில் மயிர்க் கூச்சமுண்டாகிறது. அவர் திவ்வியமுகத்தைப் பார்க்க என்மனம் துணியவில்லை. அவரில்லாத சமயங்களில் அவர்முகத்தின் அழகையே தியானித்துக் கொண்டிருக்கிறது. ஆகா! என்ன வனப்பு! என்ன கெம்பீரம்! என்குலதெய்வமே! நான் எப்போது என்மன்னனை என் மன்னனாக அடைவேனோ அப்போதுதான் என்மனக்கவலை நீங்கும். (திடுக்கிட்டு) "அடி! என்ன தைரியமுனக்கு! உன்னுடைய நிலைமை என்ன! அவருடைய நிலைமை என்ன! நீ கேவலம் ஒருவயித்தியன் மகள். உன்னுடைய தகப்பன்மேலிருந்த அபிமானத்தாலும், நீ அநாதியாயிருக்கிறாயே யென்று நினைத்தும் உன்னை எடுத்து வளர்த்து வந்ததற்கு நீ உன்னுடைய அரசனையே மணஞ்செய்யக் கருதுகி

ன்றனே! இதுதானு நீ அவர்கள்செய்த நன்றிக்குச் செய்யும் பிரதி யுபகாரம்? சீச்சீ மனமே! அவ்வெண்ணத்தை விட்டுவிடு. நான் இவ்வெண்ணம் கொண்டிருப்பது என் மன்னனுக்கும் அவர்தாய்க்கும் தெரிந்தால் அவர்கள் என்ன நினைக்கமாட்டார்கள்! ஆனுல் அரசனது தாய்மட்டும் என்னைப்போல் ஒருபெண்ணுனதால் என்னெண்ணத்தை அறிந்திருப்பார்கள் போலவே தோன்றுகிறது. ஆகையால் இனிமேல் நான் ஜாக்கிருதையாக நடந்துகொள்ளவேண்டும். வெளிக்குறிகள் ஒன்றும் தோன்றவொட்டாமல் செய்துகொள்ளவேண்டும். ஆனுல் ஒன்றுமாத்திரம் உறுதி. நான் மணஞ்செய்தால் என்மன்னன் வீரகேசரியையே மணஞ்செய்வேன். இல்லாவிடில் என்னுயிரைப் போக்கிக்கொள்வேன். அவருக்குவேறு விவாகத்திற்கு ஏற்பாடுகள் செய்கிறதாகத் தெரியவந்தால் அந்த நிமிஷத்திலேயே என்னுயிரை மாய்த்துக்கொள்வேன். ஏனெனில் வேறுபெண்ணுடன் அவர் கூடிவாழ்வதைப் பார்த்தால் என்னுயிர் தங்காது. ஆகையால் அதற்கு முன்னதாகவே என்னுயிரை மாய்த்துக்கொள்வேன். எல்லாவற்றிற்கும் என்குல தெய்வமாகிய "நஞ்செந்தின்மேய வள்ளிமணுளன்" துணை செயல்வேண்டும்.

"உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே". (என்று பாடிக்கொண்டே போகிருள்.)

## அங்கம் 2. களம் 2.

**இடம்:** ஷை அரண்மனையில் ஒரு அறை.

**காலம்:** காலை.

(மங்கையர்க்கரசி வீற்றிருக்கின்ருர்கள் வீரகேசரி வருகிருர்.)

**வீரகேசரி**—அம்மா மதுரையில் நமது சக்ரவர்த்தியிடமிருந்து திருமுகம் வந்திருக்கிறது.

**மங்கையர்க்கரசி**—என்ன விசேஷம்?

**வீரகேசரி**—நமது சக்ரவர்த்திக்கு உடம்புக்கு மிக்க அசௌகரியமாயிருக்கிறதாம். அவ்விடத்திலுள்ள வைத்தியர்களெல்லோரும் பார்த்தும் பிரயோஜநப்படவில்லையாம். ஆகையால் எந்த வயித்தியனுவது போய் சக்கரவர்த்தியைக் குணப்படுத்திஞல் அவனுக்கு வேண்டிய திரவியங்களும் பூமியும் கொடுப்பதாய் ஒவ்வொரு சிற்றரசர்களுக்கும் உத்தரவு அனுப்பியிருக்கிருர்கள்.

**மங்கையர்க்கரசி**—இப்படிப்பட்ட சமயங்களில் தான் நமதுகமலினியின் தகப்பனுகிய மிருத்தஞ்சிய வயித்தியரை நினைத்து வருத்தப்பட வேண்டியதாயிருக்கிறது. அவரிப்போது உயிருடன் இருந்தால் நமது சக்கரவர்த்தியின் நோயைக் குணப்படுத்துவது அவருக் கொரு பெரிய காரியமா? இவ்வளவு நேரத்தில் குணப்படுத்துவே னென்று சொல்லிக் குணஞ்செய்வாரே. அவ்வளவு வயித்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியும் தெய்வ பக்தியிஞலேற்பட்ட கை விசேஷமு முள்ள வயித்தியர்கள் வேறு யாரிருக்கிருர்கள்? யார் போய்க் குணப்படுத்தப் போகிருர்கள்?

(கமலினி வருகிருள்.)

**வீரகேசரி**—இதோ கமலினி வருகிருள். அவ் வயித்தியர் மகளாதலால் அவளுக்கு ஏதாவது வயித்தியம் தெரியுமா என்று கேட்போம். (கமலினி கையைப் பிடித்துத்தன் பக்கத்தில் உட்காரச் செய்து) கமலினி! உனக்கேதாவது வயித்தியம் தெரியுமோ? உன் தகப்பன் உனக்கு ஏதாவது நல்ல முறைகள் சொல்லிவைத்திருக்கிருரா?

**கமலினி**--(நாணி திடுக்கிட்டு) ஏன்! இங்கே யாருக்கு உடம்புஅசௌகரியமாயிருக்கிறது?

**வீரகேசரி**—இங்கே ஒருவருக்கு மொன்றுமில்லை. உனக்கு ஏதாவது வயித்தியம் தெரியுமோ?

**மங்கையர்க்கரசி**—ஏனவளைத் தொந்தரவு செய்கிருய். அவள் தகப்பன் இறக்கும் போது அவள் சிறு பெண். அவளுக்கு என்ன வயித்தியம் அவர் சொல்லிவைத்திருக்கப் போகிருர். அவளுக்கு என்ன தெரியப் போகிறது? அவரிருந்தால் பார்க்கலாம்.

**கமலினி**--என்ன விசேஷமம்மா? ஒன்றுந் தெரியவில்லையே!

**மஙகையர்க்கரசி**—கண்மணி! மதுரையில் நமது சக்கரவர்த்திக்கு உடம்பு மிக்க அசௌகரியமாயிருக்கிறதாம். அவ்விடத்து வயித்தியர்களெல்லோரும் பார்த்தும் பிரயோசனப் படவில்லையாம். ஆகையால், எந்த வயித்தியனாவது குணப்படுத்திருல் அவனுக்கு வேண்டிய வெகுமதி யளிப்பதாய் எங்கும் விளம்பரஞ் செய்யும்படி உத்தரவு அனுப்பியிருக்கிருர்களாம். அது விஷயமாய் உன் தகப்பனிருந்தால் அவரை அனுப்பலாமே யென்று சொல்லிக்கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் உனக்கு வயித்தியம் தெரியுமா வென்று வீரகேசரி பரிகாசஞ் செய்கிருன்.

**கமலினி**-(கொஞ்ச நேரம் யோசித்துக் கொண்டிருந்து) சக்கரவர்த்திக்கு என்ன நோயென்று தெரியுமா?

**வீரகேசரி**—நெடுநாட்பட்ட காய்ச்சலென்று தெரிகிறது. ஏன் அதற்கு ஏதாவது உனக்கு மருந்து தெரியுமா?

**கமலினி**—இவ்வளவுதானு? காய்ச்சல் அவ்வளவு கொடிய நோயல்லவென்று சொல்லுகிருர்களே! அப்படியிருந்தும் அவ்விடத்து வயித்தியர்களால் குணப்படுத்த முடியாமற் போனது ஆச்சரியமே.

**வீரகேசரி**—போய்க் குணப்படுத்தாத வயித்தியர்களைச்சிரசாக்கினைசெய்து விடுவதாகச் சக்கரவர்த்தி உத்தரவு செய்திருக்கிறபடியால், சாதாரணமாய் வயித்தியர்கள் போவதற்குப் பயப்படுகிருர்கள் போலத் தோன்றுகிறது.

**கமலினி**—அதுவுமப்படியா? நமது தற்கால அரண்மனை வயித்தியரிடம் ஆலோசிக்கலாமே! அவரும் வயித்திய சாஸ்திரத்தில் சிறந்த பண்டிதராயிற்றே

**வீரகேசரி**—அப்படியே அவரையும் கேட்டுப் பார்ப்போம்.

(எல்லோரும் போகிருர்கள்.)

## அங்கம் I. களம். III.

இடம்: ஷை அரண்மனைத் தோட்டம்.

காலம்: மாலை.

**கமலினி** (தனியே வருகிருள்.) எல்லாம் நமது செந்திலாதிபன் கிருபை யென்றே சொல்லவேண்டும். நேற்று மாலை நானிவ்விடத்தில் செய்து கொண்ட தீர்மானத்திற் கேற்ப இன்று காலை நடந்த சங்கதியை யோசித்துப் பார்த்தால் எல்லாம் வல்ல என்னுண்டவன் திருவருளாலேயே ஏற்பட்ட தென் றே நினைக்க வேண்டியதா யிருக்கிறது. இதுவே நல்ல சமயம். இதைத் தவிர விட்டுவிட்டால் வேறு தருணம் கிட்டாது. நானே மணஞ்செய்தால் எனது மன்னன் வீரகேசரியையே மணஞ்செய்வ தென்றும் இல்லாவிடில் கூடிய சீக் கிரத்தில் உயிரைப் போக்கிக் கொள்கிற தென்றும், தீர்மானித்திருக்கிறேன். இப்போது சக்கரவர்த்திக்கு உடம்பு அசௌகரியமா யிருக்கிறதென்று கேள் விப் பட்டது, என் எண்ணத்தை முடித்துக் கொள்வதற்குச் சரியான உபா யம். என் தகப்பன் இறக்குந் தருணத்தில் எனக்குப் பிதிரார்ச்சிதமாகக் கொடுத்த ஆஸ்திகள் தெய்வ பக்தியும் ஒரு சிறு மருந்துமே. அம்மருந்தை அபாய நிலையி லிருக்கிற எல்லா வியாதிகளுக்கும் கொடுக்கும்படி சொல்லியிருக்கிருர். இது வரையிலும் நான் அம்மருந்தை உபயோகப் படுத்தவுமில்லை. அதைப் பற்றி யாரிடத்திலும் சொல்லவுமில்லை. அம்மருந்தை எடுத்துக் கொண்டுபோய்ச் சக்ரவர்த்திக்குக் கொடுக்கிறேன். நமது செந்திலாதிபன் கிருபையால் குணமா னுல் சக்ரவர்த்தியைக் கொண்டு என் விவாகத்தை முடித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால் என் விவாகம் நடைபெற வேறு வழியில்லை. என் மன்னனே என்னை தன் சகோதரியாகப் பாவிக்கின்ருர். மங்கையர்க் கரசித் தாயாரோ என்னெண்ணத்தைக் கொஞ்ச மறிந்திருந்த போதிலும் இவ்விவாகத் திற்குச் சம்மதிப்பார்களென்று நான் எண்ணவில்லை. நான் ஒரு வயித்தியன் மகளென்பதை உத்தேசித்து அவர்களுக்கு ஆட்சேபனை ஏற்படத்தானே செய் யும். ஆகையால் சக்ரவர்த்தி சொன்னுல்தான் இவர்கள் சம்மதிப்பார்கள். சக்ர வர்த்திக்கு நோய் குணமானுல் அவரைச் சொல்லும்படி பிரார்த்தித்துக் கொள்ள லாம். அப்படிக் குணமாகாவிட்டால் அவரே என்னுயிரை வாங்கிவிடுவார். என் மன்னனை மணஞ்செய்யாத வரையில் நானும் இறப்பதற்கு அஞ்சவில்லை. ஆகையால் கட்டாயமாகப் போய்ச் சக்ரவத்தியைப் பார்த்து வருகிறேன். ஆனுல் அப்படிப் போவதற்கு மன்னனும் அவரது தாயும சம்மதிப்பார்களோ என்னவோ தெரியவில்லை. மேலும் அப்படிச் சொல்லிக்கொண்டு போவதும் சரியல்ல. ஆகையால் திருப்பரங்குன்றத்திற்கு வருகிற கார்த்திகைக்குப் போகவேண்டு மென்று சொன்னுல் விடைகொடுப்பார்கள். அப்படியே அங்கும் போய்விட்டு மதுரைக்குப்போய் சக்ரவர்த்தியையும் பார்த்துவிட்டு வருகிறேன். இதுவே நல்ல உபாயம். எனக்கு நல்ல கதியிருந்தால் எல்லாம் ஒழுங்காக நடைபெறும்,

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

(என்று பாடிக்கொண்டே போகிருள்.)

(இன்னும் வரும்,)

டி. பட. சங்கரலிங்கம் பிள்ளை. பி, ஏ.

# புத்தகக் குறிப்பு.

**ஞானாம்பிகை:--** இஃதொரு சிறந்த தமிழ் நாவல். விஜயசுந்தரம், கமலாகூ என்ற அருமையான நாவல்களை எழுதியவரும், இரங்கோன் கரன்ஸி ஆபீஸ் பென்ஷன் பொக்கிஷதாரும் ஆகிய திரிசிரபுரம் ஸ்ரீமத் ராவ் சாஹிப் தி. ம. பொன்னுஸாமிபிள்ளை யவர்களே இதனையும் எழுதியிருக்கிறார்கள். இந்நாவல் இலக்கணப் பிழையின்றி அழகிய வசன நடையால் எழுதப்பெற்றது. இதனுள் கதா நாயகியாகிய ஞானாம்பாளின் அரும்பெருங் குணஞ்செயல்கள் யாவும் யாவரும் வியக்கத்தக்கவாறு புனையப்பட்டுள்ளது. "இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்துவிடல்" என்ற தேவர் வாக்கை மேற்கொண்டிருத்தலுடன் கற்பின்றன்மை, பரோபகாரம், பொருளீட்டுமுறை முதலிய சிறந்த பல நீதிகளை இனிது விளக்கிச் செல்வது. சைவசித்தாந்த சாஸ்திர விஷயம் 19-வது அத்தியாயத்தில் ஒரு பிரஸங்கியார் கூற்றாகக் கூறப்பட்டதில் அத்வைத லக்ஷணம் நன்கு எளிதில் விளக்கப் பெற்றிருக்கிறது. பிள்ளை யவர்கள் எழுதும் நாவல்களி லெல்லாம் 19-வது அத்தியாயத்தில் சைவ சித்தாந்த விஷயம் விளக்கப் பெற்றிருந்தல் மிகப் பயனுடையதே. 452-பக்கங்களில் சுத்தப்பதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். நாம் இதை வாசிக்கத் தொடங்கி யிடையில் நிறுத்தமுடியாமல் முழுதும் படித்து நிறுத்தினேம். படிக்கப்படிக்க இனிக்கும் பான்மையுற்றே யிருந்தது. இதன்விலை ரூபா 1-4-0

**ஞானசம்பந்தன்:—** இப்பெயரிய சிறந்த தமிழ் நாவலும் மேற்கூறிய ஸ்ரீமாந் ராவ்சாஹிப் தி. ம. பொன்னுஸாமிபிள்ளை யவர்கள் எழுதியதே யாகும். இதனுள்ளும் சிறந்த நீதிகளும் நற்போதனைகளும் ஆன்றோராசாரத்தை விடாது இனிது விளக்கப்பட்டுள்ளன. 19-வது அத்தியாயத்தில் சைவசித்தாந்த விஷயம் பதியிலக்கணம் வெகு தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாவல்களிலும் கதாரசம் ததும்பி வடிகின்றதென்னத்தகும். நாவல் படிக்க விரும்புகிற தமிழ் மக்கட்கு பிள்ளையவர்கள் எழுதும் நாவல்கள் சிறந்த நல்விருந்தே யாகுமென்று நிச்சயமாகக் கூறலாம். இப்பிள்ளை யவர்களையே நன்னாவலர் என்பது பொருந்தும். இந்நாவல் நூல்கள் விஷயப் பொலிவுற்றிருத்தல் போலவே அச்சிட்ட வகையில் உருவப் பொலிவுங் கொண்டுள்ளன. இதன்விலை ரூபா 1—0—0. இவைகள் வேண்டுவோர் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெரு 96-நிர் கதவிலக்கமுள்ள வீட்டில் இவற்றை யெழுதியவராகிய ஸ்ரீமத் ராவ்சாஹிப் தி. ம. பொன்னுஸாமிபிள்ளை யவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**திருக்குறள் முதனினைப்பு:—** இப்பெயரிய புத்தகமொன்று நமது பார்வைக்கு வந்தது. திருவள்ளுவநாயனா ரருளிச்செய்த தமிழ் வேதமாகிய திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரங்களினு முள்ள பத்துக் குறட்பாக்களின் முதனினைப்புக்களை முறையே ஒவ்வொரு கலித்துறையி லமைத்து 133 கலித்துறையாக இதனை யியற்றியவர் யாழ்ப்பாணம் அதிவீர ராமன் பட்டணம் ஸ்ரீமத் மு. குருசாமிப்பிள்ளை யவர்களே. தமிழ் மக்கள் யாவரும் திருக்குறளை யோதி யுணர்வார்க ளாதலின் அவர்கட்கு இது மிகப் பயன்றரற் பாலதேயாம். புத்தக வடிவமைப்பும் அழகுபெற் றுள்ளது. இந்நூலாசிரியர் செய்கை யலர்க்கும் உபகாரமானதென்றே கூறுவோம்.

பத்திராதிபர்.

சிவமயம்.

# சைவசித்தாந்தவிளக்கம்

இது, விவேகபாநு 2, 3, 4 தொகுதிகளில் மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன வித்துவான் ஸ்ரீமத்.சுப்பிரமணியபிள்ளை அவர்களால் எழுதப்பெற்றது. திரிபதார்த்த லக்ஷணம் முதலிய சைவசித்தாந்த விஷயங்களை ஆராய்வார்கட்கு மிகப் பயன்தருவது. திராவிடமாபாடியத்துள் ஆங்காங்கு வந்துள்ள அரிய பெரிய விஷயங்கள் பலவும் இதில் விளக்கப்பெற்றுள்ளன. டெம்மி கருக பக்கங்கள் நல்ல கடிதத்தில் சுத்தமாகப் பதிப்பிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை பன்னிரண்டணாவேதான். தபால் சார்ஜ் வேறு. வேண்டியவர்கள் அடியில் கையொப்பமிட்ட நம்மிடமும், மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரம் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்நூலிலடங்கிய விஷயங்களை இதின் கீழ்வரும் பொருளடக்கத்தால் அறியலாம்.

இங்ஙனம்

மு.ரா. கந்தசாமிக்கவிராயர்,

வித்தியாபாநுப்பத்திராதிபர், மதுரை.

## உள்ளுறை.


| | | பக்கம். |
|---|---|---|
| க. | பதியியல்பு. | உ |
| உ. | பசுவியல்பு. | கஉ |
| ௩. | ஆணவமலவியல்பு. | அ௫ |
| ௪. | கன்மமல வியல்பு. | அஎ |
| ௫. | சுத்தமாயையினியல்பு. | கூ௩ |
| ௬. | அசுத்தமாயையினியல்பு. | கக௩ |


## பொருளடக்க அகராதி.


| | |
|---|---|
| அஞ்ஞானம் ஐந்துவகைப்படுமெனல் ... ... | ௪உ0 |
| அட்டவித்தியேசுவரர் ... ... ... | கர |
| அணுசதாசிவர்பதின்மர் ... ... ... | ,, |
| அதர்மம் பத்துவகைப்படுமெனல் ... ... ... | கஉ0 |
| அதர்வவேத உபநிடதங்கள் ௩க ... ... ... | ௬0௬ |
| அத்துவாவும் இறைவன் திருமேனியாதல் ... ... | ௬ |

| | பக்கம். |
|---|---|
| அத்துவித சம்பந்தம் ... ... ... ... | ௩௬ |
| அத்துவிதப்பொருள் ... ... ... ... | ௨௧ |
| அவகுண்டனம் ... ... ... ... | ௪௩ |
| அவைராக்கியம் அநைஸ்வரியங்களின் வகை ... ... | ௧௨௦ |
| அறு பத்து நான்கு கலைகள் ... ... ... | ௧௧௨ |
| ஆகமங்கள் இறைவன் அவயவங்களாதல் ... ... | ௯௮ |
| ஆகமங்களின் சிவபேத உருத்திர பேதங்கள் ... ... | ,, |
| ஆகமங்களைக் கேட்டவரும் உபபேதங்களும் ... ... | ௯௯ |
| ஆகமங்கள் ஐந்துவகைப்படுமெனல் ... ... | ௧௦௦ |
| ஆகமமென்பதன் பொருள் ... ... ... | ௯௭ |
| ஆகாமியம் ... ... ... ... | ௮௮ |
| ஆசனவகை ஒன்பது ... ... ... ... | ௪௮ |
| ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம். ... | ௮௯ |
| ஆரணி முதலிய மூவகைச்சத்திகள் ... ... ... | ௧௧ |
| ஆவாகனம் ... ... ... ... | ௪௩ |
| ஆறு சாஸ்திரங்களும் அவை கூறும் பொருள்களும் ... | ௧௧௧ |
| ஆன்ம சுத்தி ... ... ... ... | ௮௩ |
| ஆன்மசொரூபலக்ஷணம்... ... ... ... | ௨௦ |
| ஆன்மதடத்த லக்ஷணம்... ... ... ... | ௨௦ |
| ஆன்ம தரிசனம் ... ... ... ... | ௮௩ |
| ஆன்ம ரூபம் ... ... ... ... | ௮௧ |
| இருக்குவேத உபநிடதங்கள் பத்து ... ... | ௧௦௫ |
| இருபத்தெட்டாகமங்களும் கிரந்த எண்களும் ... | ௯௫ |
| இருவினை யொப்பு ... ... ... ... | ௬௧ |
| உடல் பொருளாவிகளை இறைவன் என்று கொள்ளல் ... | ௩௧ |
| உண்மை ஞானம் பத்துவகைப்படுமென்பது ... ... | ௮௦ |
| உபாகமங்கள் இருநூற்றேழு ... ... ... | ௧௦௩ |
| உருத்திரர்கள் வகை ... ... ... ... | ௧௪ |
| உலகவினை முதலிய ஐவகை வினைகள் ... ... | ௮௯ |
| ஐஸ்வரியம் எட்டுவகைப்படுமெனல் ... ... | ௧௧௯ |
| ஔத்திரி தீக்கையின் ஞானவதி கிரியாவதி விரிவுகள் ... | ௭௦ |
| கடவுளின் ஆறுகுணங்கள் ... ... ... | ௪ |
| கன்ம மலத்தின் ஆறுகுணங்கள் ... ... ... | ௮௮ |
| கிரியையியல்பு ... ... ... ... | ௪௧ |
| கேவல முதலிய மூன்று அவத்தைகள் ... ... | ௩௮ |
| சகலர் ... ... ... ... | ௧௫ |
| சகளீகரணம் ... ... ... ... | ௪௩ |
| சந்நிதம் ... ... ... ... | ௮௮ |

| | பக்கம். |
|---|---|
| சத்திநிபாதம் ... ... ... ... | சாரு |
| சத்திபேதங்கள் ... ... ... ... | க0 |
| சந்நிதானம் ... ... ... ... | சரு |
| சமாதி ... ... ... ... | ருக |
| சரியையியல்பு ... ... ... ... | சக |
| சன்னிரோதனம் ... ... ... ... | சரு |
| சாக்கிர முதலிய ஐந்தவத்தைகள் ... ... ... | ருச |
| சாதாரதீக்ஷை ... ... ... ... | எ0 |
| சாத்திர தீக்ஷை ... ... ... ... | ,, |
| சாமவேத உபநிடதங்கள் கக ... ... ... | க0ரு |
| சிவ தரிசனம் ... ... ... ... | அரு |
| சிவபுண்ணியம் பத்து வகைப்படுமெனல் ... ... | ருக |
| சிவ போகம் ... ... ... ... | அச |
| சிவயோகம் ... ... ... ... | அரு |
| சிவ ரூபம் ... ... ... ... | ,, |
| சிவனென்னும் நாமம் சிவனுக்கே உரிமையாதல் ... | சா |
| ஸ்ரீகண்டருத்திரன் ... ... ... ... | கூ |
| ஞான கன்ம பிரதான முறை ... ... ... | எசா |
| ஞானேந்திரியங்கள் ... ... ... ... | கஉஉ |
| தசகாரியம் சுத்தாவத்தை ஐந்து ளடங்குமுறை ... | அச |
| தத்துவங்கள் ஒடுங்கு முறை ... ... ... | கஉஎ |
| தத்துவ சுத்தி ... ... ... ... | அக |
| தத்துவ தரிசனம் ... ... ... ... | அ0 |
| தத்துவ ரூபம் ... ... ... ... | ,, |
| தாரணை ... ... ... ... | ருரு |
| தியானம் ... ... ... ... | ருசா |
| தீக்ஷை ... ... ... ... | சாஎ |
| தீக்ஷையின்றி மோக்ஷமில்லை யெனல் ... ... | சாஅ |
| தேனுமுத்திரை ... ... ... ... | சச |
| நயன தீக்ஷை ... ... ... ... | சாகூ |
| நாராயண நாமம் சிவனுக்குரிமையாதல் ... ... | சா |
| நால்வகை வாக்கு ... ... ... ... | கூரு |
| நான்கு வருணத்தாருக்கும் குருத்துவ முண்டெனல் ... | சாரு |
| நான்கு வேதங்கள் ... ... ... ... | க0ரு |
| நித்தியாநித்திய விவேகம் ... ... ... | சாக |
| நியமவகை பத்து ... ... ... ... | சாச |

பக்கம்.


நிராதார தீக்ஷை ... ... ... ... ... ... ... ௬௯
நிவிர்த்தி முதலிய ஐவகைத்திருவருள் ... ... ௧௦
பசு நல்வினை சிவ நல்வினைகளின் வகைகள் ... ... ௬௦
பஞ்சகிருத்தியங்கள் ... ... ... ... ௪
பஞ்சகிலேசம் ... ... ... ... ௧௧௬
பஞ்ச கோசங்கள் ... ... ... ... ௧௬
பஞ்சதன்மாத்திரை ... ... ... ... ௧௨௩
பதிபசுகர்த்திருத்துவ வேற்றுமை ... ... ௨௪
பதினெண்புராணங்களும் கிரந்த எண்களும் ... ... ௧௦௮
பதினெண் புராணங்கள் கூறும் பொருள் ... ... ௧௦௯
பரிச தீக்ஷை ... ... ... ... ௭௦
பராசத்தி முதலிய ஐவகைச்சத்திகள் ... ... ௧௦
பிரத்தியாகாரம் ... ... ... ... ௫௫
பிரளயாகலர் ... ... ... ... ௧௩
பிராணாயாமவகை மூன்று ... ... ... ௫௦
பிராரத்தம் ... ... ... ... ௮௮
பிராரத்தத்தின் ஆறுவகை ... ... ... ,,
புத்தி தத்துவத்தின் எண்வகைக் குணங்கள் ... ... ௧௧௮
புறக்கருவி அறுபது ... ... ... ... ௧௨௯
மலபரிபாகம் ... ... ... ... ௬௨
மானத தீக்ஷை ... ... ... ... ௭௦
முத்தியினும் ஆன்மாக்களடிமையாதல் ... ... ௨௯
முத்தியையளிப்பவர் சிவபிரானே யென்பது ... . ௧௩௧
முத்திரைகளினிலக்கணம் ... ... . ௪௪
மூலமலத்தின் காரியம் எழு ... ... . ௮௬
மூவகையான்மாக்களின் பொதுவியல்பு ... ... ௧௨
யசுர்வேத உபநிடதங்கள் ௫௧ ... ... ... ௧௦௫
யோக தீக்ஷை ... ... ... ... ௭௦
யோகவகை எட்டில் இயமவகை பத்து ... ... ௪௪
வருணாச்சிரம தருமானுட்டானம் வேண்டுமெனல் ... ௭௫
வாசக தீக்ஷை ... ... ... ... ௭௦
விஞ்ஞானகலர் ... ... ... ... ௧௨
வேதாந்த சூத்திரம் ... ... ... ... ௧௦௭
வைராக்கியம் பத்துவகைப்படுமெனல் ... ... ௧௩௮
ஸ்தாபனம் ... ... ... ... ௬௩

# உண்மை யுரைப்போர்க்கு உணர்வு கொளுத்தல்.

21—7—13ல் பிரசுரமான லோகோபகாரியில் "உண்மை யுரைப்போன்" என்பாரொருவர் "ஒரு பிரசங்க மாறுபாடு" என்னுந் தலைக்குறியிட்டெழுதிய ஒரு சிறு வியாசத்தை 28—7—13ல் வெளிப்போந்த "வைசிய மித்திரன்" அநுபந்தத்திற் பார்த்தேம். அதன்கண், கண்டனூர் முத்துராமையா கூற்றாகச்சில விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை, ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பள்ளத்தூர்ச் சபையிற் செய்த "கடவுள் வழிபாடு" என்னும் உபந்நியாச சாரத்தைச் சுருக்கிச் "சங்காபிமானி" யென்பவர் 24—3—13ல் வெளியிட்ட வியாச சம்பந்தமான போலி வினாக்களாக வைசிய மித்திரனில் முன்னரே வந்தன வென்பதும், அவற்றிற்குத் தக்கவாறு 12—5—13. மித்திரனில் ஸ்ரீ கரு. முத்து. அழகப்பசெட்டியாரவர்களால் "கேள்விக்கு மறுமொழி" யென்னுந் தலைப்பின் கீழ் விடை பிறுக்கப்பட்டன வென்பதும், பின்னர் அண்ணாமலைச் செட்டியா ரென்பாரொருவர் "கடவுள் வழிபாடு என்பதற்கு மறுப்பு" என்று சிலவரிகளாலொரு வியாசந் தீட்டின ரென்பதும், அதனையும் ஒழுங்காக மறுத்து அம்மறுப்பின் மூலமாக சைவ சித்தாந்த விஷயங்கள் பல விளங்கும்படி ஸ்ரீ அழகப்ப செட்டியாரவர்களே 7—7—13 மித்திரனில் "எதிர் மறுப்பு" என்னுந் தலைப்பெயரா லொருவியாசம் வெளியிட்டன ரென்பதும் மித்திரனபிமானிகள் யாவரு முணர்வர். அம்மறுப்புக்களைப் படித்துணராமல் உண்மை யுரைப்போன் என்பவர் மீண்டும் "முத்துராமையா சொல்கிறார்" என்று அவரெழுதியவை யனைத்தையும் அநுவதிக்கின்றார். அவ்வநுவாத விஷயங்கள், "கேள்விக்கு மறுமொழி" எதிர் மறுப்பு" என்னும் இருவியாசங்களானும் எரிமுற்பட்ட பஞ்சுத்துய்ப் போல வுருவழிந்து போயினவாதலின், அவற்றை விட்டு உண்மை யுரைப்போன் புதுமையாக வினவுகின்ற இரண்டு விஷயங்களுக்கு மட்டும் மறுமொழி தருவோம்.

முதலில், உண்மை யுரைப்போன் ஸ்ரீ கதிரேசச் செட்டியாரவர்கள் உபந்நியாசம், இன்ன சமய முறைபற்றிய தென்பதனை

யும், இவ்வாறு தொடங்கி முடிக்கப்பெற்ற தென்பதையும், நேரிற் கேட்டாவது, அங்ஙனங் கேட்டார் மூலம் உணர்ந்தாவது, இது பற்றி முன்வைசிய மித்திரனில் வந்த விபாசங்களைப் படித்தாவது தெரிந்திலரென்பது அவர் வினாக்களால் விளங்குகின்றதாதலின் மிகை யெனினும் அவற்றைத் தெரிவித்த லவசியமாகின்றது. ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் செய்த "கடவுள் வழிபாடு" என்னும் உபந்நியாசம் சைவசித்தாந்த முறை பற்றிய தென்பதும், அதனைத் தொடங்குங்கால், கடவுள் யார்? வழிபாடு யாது? வழிபடுவோன் யாவன்? வழிபடு மாறெங்ஙனம்? அதனாலாம் பயனென்னை? யென்றின்னோ ரன்னவினாக்களுண்டா மெனவும், இவ்வினாக்களுக்கு விடையாக முதலிற் காட்சியாற் பெறப்படும் உடலைப் பொருந்தியிருக்கின்ற வழிபடுவோனாகிய ஆன்மாவினுண்மையைத் தெரிந்து கோடல் வேண்டு மெனவும், அங்ஙனந் தெரிந்து கோடற்கு முதலில் "நானார் என்னுள்ளமார்" என்னும் விசாரணையை மேற்கொண்டால் உடல் பொறி கரண முதலியவற்றிற்கு வேறாக ஆன்மா ஒருவனுள னெனவும், அவ்வான்மாவுக்கு வினைக்கேற்றவாறு மாயா காரிய மாகிய தநுவாதிகளைக் கொடுத்து மூலமாகிய ஆணவத்தைக் கெடுத்து ஆட்கொள்பவனாகிய கடவுள் ஒருவனுளனெனவும், அக்கடவுளிலக்கண மின்னதெனவும், அவனே வழிபடற்பால னெனவும், அவ்வழிபாடு மனோ வாக்குக் காயங்களாற் செய்யத்தக்க தெனவும், அதன் பயன் புருடார்த்தங்களை யெய்தலெனவும், பிறவுங் கூறி மிக அழகாகவும் முறை பிறழாமலும், முடிக்கப் பெற்ற தென்பதும் உண்மை யுரைப்போன் உணர்ந்து கொள்வாராக. இங்ஙனம் நேரினமணியைநிரல்படக் கோத்தாங்கு மிகச்செவ்விதாக நடைபெற்ற இவ்வுபந்நியாசத்தைச் சுருக்கியும், விளக்கியும் நேரிற் கேட்ட "சங்காபிமணி" யென்பார், தஞ்சொன்னடையாற் றெரிவித்தார். அவர், வினாக்களை விடுத்து விடைகளைக் கூறியதுஞ் சுருக்கமாகத் தெரிவித்தற்கேயாம். இது, நுண்ணுணர் வுடையார்க்கு விளங்காமற் போகாது.

இனி, உண்மையுரைப் போன்வினாக்கள் ஆராயப்படும். 1-வது வினா "பஞ்சகோச விசாரஞ்செய்து திரிபுடியில்லாத விடத்தில் கடவுள் என்றும் வழிபடுபவன் என்றும் பிரசங்கித்தது பொருந்துமா?"

என்பதேயாம். பஞ்சகோசங்கள் ஆன்மாவுக்கமைந்த ஐவகைச் சரீரங்களேயாம். அவை முறையே அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பனவாம். இவை பிறிதோர்வகையாக முறையே தூலசரீரம், சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரணசரீரம் எனவுங் கூறப்படுவனவாம். இவ்வைந்தும் மாயாகாரியங்களாய் முறையே ஒன்றற்கொன்று சூக்குமங்களாக இருக்கும். கேவலத்தில் ஒன்றுமின்றி மலமாத்திரையாய் நின்ற ஆன்மா மாயையிற் கலக்குண்ட பாகத்தை முதலிற் பொருந்தி அறிவிச்சை செயல்கள் சிறிது விளங்கப்பெற்ற மாத்திரையே, அம்மயக்கவறிவாலோரானந்த முண்டாகப் பெறுதலின், அஃது ஆனந்தமயகோச மெனப் பட்டது. பிறவும் இவ்வாறே காரணம்பற்றி வந்தனவாம். ஆன்மா இவ்வைங் கோசங்களையுந் தனக்கு உறைவிடமாகக் கொண்டு போக்குவரவு செய்துநிற்கும். இதற்குப் பிரமாணம்:— சிவஞானசித்தியார் நான்காஞ் சூத்திரம் 23-வது திருவிருத்தம்:—

"மருவா னந்தம் விஞ்ஞான மனோபி ராண வன்னமயம்
உருவாந் தன்மை யுண்டாய்முன் னொன்றுக் கொன்று சூக்குமமாய்
வருமா மன்ன மயம்பற்றி மாயை முதற் கா ரணமாகும்
அருவா மான்மா வைங்கோசத் தார்ப்புண் டவற்றி னகம்புறமாம்"

என்பதாம். இன்னும், இவ்வான்மா இச்சரீரங்களைப்பற்றியெய்தும் சாக்கிராதியவத்தை யியல்களும், அவை கீழ்நோக்கியொடுங்கு முறையும், மேல்நோக்கித் தோன்றுமுறையும், ஒவ்வோரவத்தையிலும் ஆன்மாவுக்குத்தொழிற்படுந் தத்துவங்களினளவும்,பிறவும் விரிவாகவும்,விளக்கமாகவும் சிவஞானசித்தியார் நான்காஞ் சூத்திரத்திருவிருத்தங்களிற்காண்க. இப்பஞ்சகோச விசாரணையால் ஆன்[illegible]சயந்தெரியலாமென்பதை, மேற்காட்டிய சிவஞான சித்தித் திருவிருத்த விசேட வுரையில் "ஆன்மாவினுண்மை யுணர்தற்கு இவற்றை இங்ஙனம் பகுத்தறிதலும் ஒருசாதனமெனக் கொள்க" என்று ஸ்ரீ சிவஞான முனிவரர்கூறி யருளியமையானுணர்க. இவ்வாறு ஆன்மாக்கள், தந்நிலையை யுணர்ந்து தமக்குள்ளும் புறம்பும் வியாபித்துள்ள இறைவனிலையையு முணர்ந்து அவ்விறைவன் றண்ணருளைப்

பெறவழிபடு மியல்பினவாம். இதனை, "தம்மையுணர்ந்து தமையுடையதன்னுணர்வார்" என்னும் ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருவாக்கானுமுணர்க. முத்தி நிலையிலும் கடவுள் ஆன்மா வென்னு மிரு பொருள்களும் அநுபவக் கலப்பாலொன்றாகியும், பொருள் வகையால் வேறாகியும் உள்ளனவெனவும், அச்சம்பந்த விசேடமே அத்துவிதமெனவும் சைவ சித்தாந்த நூல்கள் கூறும். திரிபுடியற்ற நிலை யநுபவநிலையேயாகும். அந்நிலையிலும் ஆன்மா பொருள் வகையாக நோக்க வேறாமென்று கூறுஞ் சைவ சித்தாந்த நுட்பத்தை யுணரும் ஆற்றலில்லாத "உண்மை யுரைப்போன்" பஞ்ச கோச விசாரஞ் செய்தவுடன் திரிபுடி யில்லாதொழியு மெனவும், அவ்விடத்தில், கடவுள் என்றும் வழிபடுபவ னென்றுங் கூறுதல் பொருந்தாதெனவுங் கூறுகின்றார். இக்கூற்று ஏகான்மவாதம் பற்றியதாகலின், ஈண்டைக்கேலா தென்க. முதலிற் பிரபஞ்ச முதலியன உள்பொருள்களென வியவகரித்து முடிவி லவை யனைத்தும் பொய்யெனக் கூறுதல் ஏகான்மவாதமாதலால் அம்மதச் சார்பில் நின்று. "கடவுளென்றும் ஆன்மா வென்றுங் கூறுதல் பொருந்தாது" என்று கூறவந்த இவர்பொய்யுரைப் போராகவும், உண்மையுரைப் போராக வெளிப்பட்டதென்னையோ? இனி, இவர் வியாவகாரிகத்தில் உண்மையும், பாரமார்த்திகத்தில், பொய்ம்மையு முரைப்போராதலின், இப்பெயர் பொருந்துமாலெனின்; இவர் கூறுவன வெல்லாம் உண்மையிற் பொய்யாயொழியு மென்பது போதரும். அங்ஙனமாயின், "திரிபுடியில்லாதவிடத்தில் கடவுளென்றும், ஆன்மா வென்றும் பிரசங்கித்தல், இவர் கொள்கைப்படியும் உண்மையிற் பொருத்தமாதலுணர்க.

இனி, 2-வது வினு, "மக்கள் ஐயறிவுடையவர்களா? ஆறறிவுடையவர்களா? எந்த நூலாதாரத்தால் மககளுக்கு ஐயறிவென்று கே[illegible] என்பதே. மனிதரைப் பொறியுணர்ச்சிபற்றிப் பொதுவகையாகக் கூறுங்கால் ஐயறிவுடையரெனவும், மனவுணர்வு பற்றிச் சிறப்பு வகையாற் கூறுங்கால் ஆறறிவுடையரெனவும் வழங்குதல் பெரியார் வழக்காதலின் ஐயறிவுடைய மக்களென்பதும் பொருந்தும். இதனை "[illegible]வனவர் மக்கள் நரகர் விலங்குபுள், ஆதிசெவியறி வோடையறிவுயிரே" என்னும் நன்னூற் சூத்திரத்தானுமுணர்க. மனவுணர்வு, எய்தப்படும் புலன்கள் வேறுபாட்டால் ஐவகையாமாத

லின், அம்முறைபற்றி ஐந்தாகிய அறிவு மனம் என்னும் பொருள் தோன்றும்படி ஐயறிவுடைய மக்கள் என்று கூறுதலும் மிக்கபொருத்த முடையதேயாம். இதற்குப் பிரமாணமாக "ஐயுணர் வெய்தியக் கண்ணும்" என்னுந்திருக்குறளையும், அதற்குஆசிரியர் பரிமேலழகர் " ஐந்தாகிய உணர்வு மனம்" என்று கூறிய வுரையையுமுற்று நோக்குக. இங்ஙனம் பொருள் கொள்ளுங்கால் மனவுணர்வுடைய மக்கள் என்று ஒருவித முரணுமின்றி யிருத்தலுமுணர்க. "எந்த நூலாதாரத்தால் மக்களுக்கு ஐயறிவென்றார்" என்று இவர் மேற்கொண்ட கடா, மேற்காட்டிய சூத்திரம், திருக்குறள் என்னுமிருகோடுடைய விடையால் தாக்குண்டு வீழ்ந்தமை சிறுவருமுணர்வர்.

இனி, ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள், மக்கள் ஆறறிவுடையரென்பதை யுணராதவரல்லர். இதனை இரண்டு வருடங்களின்முன் அவர்கள் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையிற் பிரசங்கஞ்செய்து அச்சிடப்பட்ட "நகரத்தார்களின் சீர்திருத்தம்" என்னும் புத்தகத்தின் 2-வது பக்கத்தில் "கல்வியின் காரியமாகிய பகுப்புணர்வுள் வழியே ஐம்பொறியுணர்ச்சியானும், உண்டி, உறக்கம், பெண்விழைச்சு முதலியவற்றானும் ஒப்புடைய விலங்கினத்தினின்று மனிதர் மேம்பாடுடையராவர்; அஃதில்வழி, அவ்விலங்கினத்தோடொருங்கெண்ணப்படுவர்; இது கருதியன்றே, " மாவுமாக்களுமையறிவினவே; மக்கடாமேயாறறிவுயிரே" என்று வரையறைப்படுத்துக் கூறினார் தொல்காப்பியனாரும்,என்று எழுதியிருப்பதாலும் நன்கு அறியலாம். இதனால், செட்டியாரவர்கள் தம்பிரசங்கத்தில், "மக்கள்,ஐம்பொறிவாயிலாக விடயங்களிற் செல்லும் அறிவை யங்ஙனஞ்செல்லவொட்டாது உண்முகப்படுத்தி 'நானார் என னுள்ளமார்?' என்று விசாரஞ்செய்யப்புகின் என்று தொடங்கிக் கூறியிருக்கின்றார்களென்பது யாவருமுணரக்கூடிய தொன்றேயாம். இதனைச்சுருக்கி யெழுதப்புகுந்த சங்காபிமானியார் இப்பொருள் தோன்ற "ஐயறிவுடைய மக்கள்" என்றெழுதினாரென்று கோடலும் பொருந்தும் இங்ஙனங் கொள்ளுங்கால், ஐயறிவுடைய என்னுந் தொடர்க்கு விடயங்களிற் செல்லும் ஐம்பொறியறிவும் ஒழிய என்பது பதப்பொருளென உணர்க. உடைதல்-ஒழிதல். உடைய என்னும் வினையெச்சம் "விசாரஞ்

செய்யப்புகின், என்பதிலுள்ள செய்ய என்னும் வினையெச்ச வினையைக்கொண்டு முடியும். இங்ஙனம் எவ்வாற்றானோக்குழியும் ஐயறிவுடைய மக்கள் என்று கூறுதல் பொருந்துமென்பது வெள்ளிடைமலையாயிற்று. இவ்வளவினானே, உண்மையுரைப்போன் மேற்கொண்ட வினாக்கள் பழங்கனாக்கள் போலாயின.

இனி, ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்களைப்பற்றி "தம் மனம் போன போக்கில் பிரசங்கிக்கிறாரென்பது அவர் தமினத்தாருமுணர்ந்தார்" என்று நிந்திக்கத்தொடங்குகின்றார். ஸ்ரீ செட்டியாரவர்கள் இற்றைக்கு ஐந்து வருடங்களாக நாட்டுக்கோட்டை நகரத்தார் வசிக்கும் பல பெரிய நகரங்களினும், மதுரை, தூத்துக்குடி முதலிய அயனகரங்களினும், பல அரிய பெரிய விடயங்களைப்பற்றி மிக அருமையாகவும், இனிமையாகவும் கேட்டார்ப் பிணிக்குஞ் சொல்வன்மையோடு மிக அழகாகப் பல உபந்நியாசங்கள் செய்து வருகின்றன ரென்பதும், அவ்வுபந்நியாசங்களின் முறையையும், பிற நயங்களையும் பாராட்டி யவ்வப்போது அவ்வச்சபையோரால் சுதேசமித்திரன், வித்தியாபாநு, நீலலோசனி, வைசியமித்திரன் முதலிய பத்திரிகைகளிற் பிரசுரமான செய்திகளானும், காட்சியானும் இத்தமிழ்நாட்டுள்ளார் யாவரும் கண்டுங் கேட்டுமகிழ்ந்திருக்கின்றன ரென்பதும், இலக்கிய இலக்கண ஆராய்ச்சியின்றி ஆரம்பத்திலே தத்துவ சாத்திரப்பிரசங்கம் புரிய முன்வந்து ஒன்றிடக்க ஒன்று கூறுஞ் சில போலிப் பிரசங்கிகள் போலாது மிக்க திட்ப நுட்பமான சொற்பொருட் செறிவோடு கேட்பார் பரவசமாகும்படி பிரசங்கிக்கும் ஆற்றல் பெரிதுடையா ரென்பதும், இந்நாட்டுள்ள நடுநிலை பிறழா நல்லோர் யாவரு முணர்வர். இவர்கள் பிரசங்கங்களுள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தினும், மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையினும் செய்த "சன்மார்க்கம்" "சீர்திருத்தம்" என்னும் இரண்டு உபந்நியாசங்கள் செந்தமிழிலுந் தனிப்புத்தக வுருவமாகவும் வெளிப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துப் பார்த்துப் பாராட்டி யெழுதிய பல பெரியோர்கள் அபிப்பிராயங்களானும், பத்திரிகைகளானும் இவர்களுபந்நியாசங்களின் மாட்சி நன்கு

விளங்கும். இங்ஙனஞ் சென்னை மாகாணத்திலுள்ள இலௌகிக வைதிகங்களில் மிக்க அதுலர்களாகிய பெரியார் பலராற் பாராட்டப் பெற்ற ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் பிரசங்கத்தை "மனம் போன போக்காக வுள்ளதென்பது அவரினத்தாரு முணர்ந்தார்" என்றிவர் கூறியதை நோக்க இவர்க்கு அவரினத்தாருள் இலக்கிய இலக்கண வாராய்ச்சியின்றிப் போலிக் கல்வியுடையராய் வேதாந்தம் பேசப் புறப்படுஞ் சிலர் பொறாமையுற்றுக் கூறியிருக்கலாம் போலும். அங்ஙனங்கூறினும் உண்மை யுரைப்போ னுண்மையுணராமை யென்னையோ? கதிரவனொளி கறுப்பெனின்; ஆராய்தல் வேண்டுமன்றோ? "தாய்க்கொலை சால்புடைத் தென்பாருமுண்டு" என்றாங்கு சொல்வார் சொன்னாற் கேட்பார் மதி யெங்கே போயிற்று.

இனி, இவ்விஷயமாக யாரேனும் எழுதவேண்டுமானால், இதனையும் இதற்கு முன் ஸ்ரீ கரு. முத்து. அழகப்பசெட்டியாரவர்களிது சம்பந்தமாக எழுதிய இரண்டு வியாசங்களையும் சற்று அவகாசத்தோடு கூர்ந்து. ஆராய்ந்து எழுதுக.

இங்ஙனம்

**மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.**

# சமாசாரக்கொத்து.

**ஸ்ரீமாந் ராயபகதூர் பே.மா. மதுரைப்பிள்ளையவர்கள் காலஞ்சென்றார்:—** இரங்கோன் முனிஸிபல் கௌன்சிலரும்.ஆனரரி மேஜிஸ்திரேட்டும்,கனதன வியாபாரியும், செந்தமிழபிமானியும், பெருங் கொடையாளியும், பரோபகாரியும், தைர்யசாலியும், மிகுந்த செல்வாக்கும் ராஜவிசுவாசமும் [illegible] வருமாகிய ஸ்ரீமாந் மதுரைப்பிள்ளையவர்கள் சில காலமாக இருதய வியாதியால் பீடிக்கப்பட்டிருந்து நிகழும் 1913௵ ஜூலை௴ 15௳ காலஞ்சென்றார் எனக் கேட்டுமிகுந்த விசனமடைகிறோம்.

இவர் சென்னையைச் சார்ந்தவராவார். இரங்கோனில் சென்று முதலில் சிறிய உத்தியோகத்திலமர்ந்து தமது மதி வலிமையால் வரவர மேன்மையடைந்து வியாபார விர்த்திபெற்றுப் பொருளும் புகழும் மிகச்சம்பாதித்தனர். ஏழைகளிடத்து இரக்கமுள்ளவர். சென்னைராஜதானியிலிருந்து தொழிலுக்காக இரங்கோனுக்குப் போகிற சர்வ ஜனங்களுக்கும், இவர் ஒரு பெரிய உபகாரியாக இருந்தார். யார் வந்து என்ன குறைகளைக் கூறினும் அவற்றைக் கேட்டு உடனே வேண்டிய பரிகாரம் செய்து அவர்கள் மனத்தை மகிழ்வித்து வந்தார். அங்குள்ள எல்லா வகுப்பினருக்கும் இவரிடத்து அச்சமும் அன்பும் உண்டு. இவர் பிரிவு இந்துக்கள் பலர்க்கும் பெரு நஷ்டமேயாம். இவரைப்போல எல்லாவித சிறப்புங் கொண்டு வேறொருவரிருப்பதாக நினைக்க முடியாது. தமிழ்ப் புலவர்களிடம் பாடல் பெறுவதில் அதிகப்ரீதி யுடையவர். இவர்மீது பல வித்துவான்களும் பாடிய பாடல்கள் எத்தனையோ ஆயிரமிருக்கும். இரங்கோன் நகரத்தைப்பற்றிச் சிறிது தெரிந்த எவரும் இவரை யறியாதிரார். இத்தகைய சீமானுக்கு பூர்ண ஆயுசு இல்லாது போனது மிகவும் விசனிக்கத் தக்கதே.

பத்திராதிபர்.